“சோதனைகளின் அவசியம்” ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சொற்பொழிவிலிருந்து... பக்கம் 3

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு (தொடர்-12) பக்கம் 7

திருக்குர்ஆனின் வசனங்கள் நீக்கப்பட்டுள்ளனவா? (தொடர்-2) பக்கம் 13

மார்க்க அறிவுப் புத்தகம் (தொடர்-2) - - சிறுவர் பகுதி - - பக்கம் 19

மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | December 2022 | Vol. 2 - Issue No. 1
Ahmadiyya Muslim Jama’at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 96297 46340

## காதியான் ஜல்ஸாவில் கலந்து கொள்வதன் முக்கியத்துவம்!



காதியான் ஆண்டு மாநாடு 2021

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறையறிவிப்பிற்கிணங்க காதியானில் ஜல்ஸா ஸாலானா (ஆண்டு மாநாடு) -ஐ ஆரம்பித்து வைத்தார்கள். இந்த ஜல்ஸா டிசம்பர் 26, 27, 28 ஆகிய தேதிகளில் காதியானில் நடைபெறுகிறது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த குறிப்பிட்ட நாட்களில் காதியானுக்கு வர முடிகின்ற ஜமாஅத்தின் அன்பர்கள் அனைவரும் காதியானில் ஒன்று கூடி திக்ரே இலாஹியில் பங்கு பெற வேண்டும் என்பதைத் தமது விருப்பமாகக் குறிப்பிட்டார்கள்.

எனவே எவர்களால் ஜல்ஸாவுக்கு வர முடியுமோ அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். அவர்களுக்கு முழு ஜமாஅத்தின் சார்பாக இந்த சிறப்பான பொறுப்பு தரப்பட்டுள்ளது. இதனை நிறைவேற்றுவது அவர்களின் முதல் கடமையாகும். முழு ஜமாஅத்தும் இந்த ஜல்ஸாவில் பங்கு பெறுவது இயலாத ஒன்றாகும். எனவே எல்லாப் பகுதிகளிலும் உள்ள ஆண், பெண், குழந்தைகள் ஆகியவர்களிடத்தில் அஹ்மதிய்யத்தின் ஆவியை நிலைபெறச் செய்வதற்காக எவர்களால் கலந்து

(தொடர்ச்சி கடைசி பக்கம்...)



# திருக்குர்ஆன்

وَلَنَبْلُوَنَّكُمْ بِشَيْءٍ مِّنَ الْخَوْفِ
وَالْجُوعِ وَنَقْصٍ مِّنَ الْأَمْوَالِ وَالْأَنْفُسِ
وَالثَّمَرٰتِ ۗ وَبَشِّرِ الصّٰبِرِيْنَ ﴿١٥٦﴾

மேலும் ஓரளவு பயத்தாலும், பசியாலும் செல்வங்கள், உயிர்கள், கனி வகைகள் ஆகியவற்றின் இழப்பாலும் நிச்சயமாக நாம் உங்களைச் சோதிப்போம். மேலும் (தூதரே!) நீர் பொறுமையாளர்களுக்கு நற்செய்தியைக் கூறுவீராக. (2:156)



# ஹதீஸ்

عَنِ النَّبِيِّ صلى الله عليه وسلم قَالَ " مَا يُصِيبُ الْمُسْلِمَ مِنْ نَصَبٍ وَلاَ وَصَبٍ وَلاَ هَمٍّ وَلاَ حُزْنٍ وَلاَ أَذًى وَلاَ غَمٍّ حَتَّى الشَّوْكَةِ يُشَاكُهَا، إِلاَّ كَفَّرَ اللَّهُ بِهَا مِنْ خَطَايَاهُ ".

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

“ஒரு முஸ்லிமுக்கு எந்தவொரு கஷ்டமோ அல்லது உடல்நலக் குறைவோ அல்லது துன்பமோ அல்லது துயரமோ அல்லது தீங்கோ அல்லது பேரிடரோ ஏற்பட்டாலும் அல்லது ஒரு முள் குத்தினாலும் கூட அல்லாஹ் அதனை அவரது பாவங்களுக்குப் பரிகாரமாக்கி விடுகின்றான்.”

(புகாரி ஹதீஸ் எண் 5641)

# “சோதனைகளின் அவசியம்”

## 28.12.1907 அன்று காதியான் ஆண்டு மாநாட்டின்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மஸ்ஜித் அக்ஸாவில் ஆற்றிய சொற்பொழிவிலிருந்து....

**தமிழாக்கம்: A. நாஸிர் அஹ்மது**

இந்தக் காலக் கட்டம் மிகவும் அபாயகரமானது என்பதை ஒவ்வொரு விதத்திலும் மக்களின் மனங்களில் பதிய வைப்பது எனது கடமையாகும். இதை விட அதிகமான அபாயத்தைக் கொண்ட நியாயத் தீர்ப்புநாள் அருகில் வந்து விட்டதோ என்று எண்ணக் கூடிய அளவிலான ஓர் அபாயகரமான நேரம் விரைவில் வந்து கொண்டிருக்கிறது என்பதை மீண்டும் மீண்டும் இறைவன் இறைஅறிவிப்புகளின் வாயிலாக என்னிடம் எச்சரித்து வருகிறான். நான் நேற்று விளக்கியபடியே பிளேக், கொள்ளை நோய், பஞ்சம், பூமியதிர்ச்சிகள் போன்ற பல்வேறு வடிவங்களில் மரணங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இத்தகைய பேரிடர்கள் நிகழும் போது உலக மக்கள் மதியிழந்து, மிகுந்த துக்கத்தினாலும் துயரத்தினாலும் பீடிக்கப்பட்டு அதிலிருந்து வெளிவர வழி தெரியாதவர்களாக இருப்பர். திருக்குர்ஆன் இதனைக் குறித்து இவ்வாறு கூறுகிறது.

وَتَرَى النَّاسَ سُكٰرٰى وَمَا هُمْ بِسُكٰرٰى நீர் மக்களை போதைக்கு ஆளானவர்களாக காண்கின்றீர். ஆனால் அவர்கள் போதைக்கு ஆளாகவில்லை. மிகக் கடுமையான துக்கத்தினாலும் அச்சத்தினாலும் துணிவிழந்து புத்தி பேதலித்துபோய் உள்ளனர். (திருக்குர்ஆன் 22:3) இத்தகைய தருணங்களில் இறையச்சமுடைய ஒருவரால்தான் பொறுமையைக் கையாள முடியும். மார்க்கரீதியான விஷயங்களில் தக்வாவைக் கைக்கொள்பவரே பொறுமை செய்ய முடியும். எவர் தம்முடைய நாட்டத்தை இறை நாட்டத்துடன் ஒருநிலைப்படுத்துவாரோ அவரே இத்தகைய பேரிடரைத் தாங்கிக் கொள்ள முடியும். மனிதனின் ஈமான் முன்னரே உறுதியாக இல்லை என்றால் ஒரு சிறிய இழப்பின் காரணமாக அவன் தடுமாற்றமடைந்து இறைமறுப்பாளனாகி விட முடியும். இறைவனிடம் ஒரு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளாதவர் பேரிடரைத் தாங்கிக் கொள்வதற்கு சக்தி பெற மாட்டார்.

இத்தகைய பேரிடர்களின் போது உலகையே நோக்கமாகக் கொண்டிருப்பவர்கள் இறை இருப்பையே மறுத்து விடுகின்றனர். துன்பங்கள் இன்றியமையாத விதத்திலேயே இந்த உலகு அமைக்கப்பட்டுள்ளது.



இவ்வுலகில் வாழ்ந்தவர்களுள் எந்த துர்பாக்கியத்தையும் சந்திக்காதவர்கள் எவர் இருக்க முடியம்? சிலருக்குக் குழந்தைகள் விஷயத்திலும் சிலருக்கு செல்வத்திலும் வேறு சிலருக்கு கண்ணியத்தினாலும் துர்பாக்கியம் ஏற்படுகிறது. சுருக்கமாக ஒவ்வொருவரும் சில துர்ப்பாக்கியத்தை சோதனைகளைச் சந்திக்க நேரிடுகிறது. இந்தஉலகில் இதிலிருந்து தப்புவதற்கு எந்த வழியுமில்லை. ஓர் அரபிக் கவிஞர் கூறுகிறார்:

سَئِمْتُ تَكَالِيْفَ الْحَيَاةِ وَمَنْ يَعِشْ ثَمَانِيْنَ حَوْلًا لَا أَبَالَكَ يَسْئَمِ

இவ்வுலகில் பல துன்பங்களை நான் சந்தித்துள்ளேன். என்னைப் போன்று 80 வயது வரை வாழ்பவர்களும் நிச்சயமாக துன்பங்களைச் சந்தித்திருப்பார்கள்.

இவ்வுலகின் துர்பாக்கியங்கள் சில நாட்களுக்கு மட்டுமே ஆகும். இறுதியில் அனைவருமே மரணிக்க வேண்டும். சிலர் முன்னதாக சிலர் தாமதமாக மரணித்தே ஆக வேண்டும்.

மார்க்கத்தின் வழியில் இரண்டு வகையான துன்பங்கள் உள்ளன. ஒன்று, ஷரீஅத்துடன் சம்பந்தப்பட்ட துன்பங்கள் ஆகும். அவை கடமையாக்கப்பட்ட தொழுகை, நோன்பு, ஹஜ் மற்றும் ஸக்காத் போன்றவை. மனிதன் தனக்கு இழப்பு நேரிட்டாலும் தனது பணியை இடைநிறுத்தி விட்டு தொழுகைக்காக பள்ளிவாசல் செல்கின்றான். குளிர் காலத்தில் அவன் பின்னிரவு நேரத்தில் தொழுகைக்காக எழ வேண்டியதிருக்கிறது. ரமலானின் போது முழுப்பகலும் அவன் பசியையும் தாகத்தையும் தாங்க வேண்டியதுள்ளது. ஹஜ்ஜின்போது பயணத்தின் கஷ்டங்களை சகிக்க வேண்டியதுள்ளது. கஷ்டத்துடன் உழைத்து சம்பாதித்த பணத்தை ஸக்காத்திற்காக பிறருக்கு வழங்க வேண்டியதுள்ளது.

இவைஅனைத்தும் ஷரீஅத்தின் துன்பங்களாகும். அவை அவனது நற்கூலிக்குக் காரணமாக அமைகின்றன. மேலும் அவன் இறைவன் பக்கம் முன்னேறிச் செல்வதற்கு வழிகோலுகின்றன. எனினும் இவை அனைத்திலும் மனிதனுக்கு சில சலுகைகள் தரப்பட்டுள்ளன. அவன் அதனைப் பயன்படுத்தி தனக்கு எளிதை உருவாக்கிக் கொள்கின்றான். உதாரணமாக, குளிர் காலத்தில் அவன் சூடான நீரை ஒளு செய்யப் பயன்படுத்திக் கொள்கின்றான். நோயின் காரணமாக அவனால் நின்று கொண்டு தொழ முடியவில்லை என்றால் அவன் உட்கார்ந்து கொண்டு தொழுது விடுகின்றான். ரமலானின்போது ஸஹர் வேளையில் அதிக அளவில் உணவு உட்கொள்கின்றான். சிலர் வழக்கத்தை விட ரமலானில் அதிக அளவு உணவுக்காக செலவிடுகின்றனர். சுருக்கமாக மனிதன் ஷரீஅத்தின் இந்தக் கடினங்களின்போது எளிதான வழியில் செல்ல முயற்சிக்கின்றான். எனவேதான் இதனால் முழுமையான தூய்மை பெறப்படுவதில்லை. மேலும் ஆன்மீகப் பயணத்தின் பல்வேறு வளர்ச்சி நிலைகள் விரைவாகக் கடக்கப்படுவதில்லை.

ஆனால் விண்ணிலிருந்து இறங்கும் துன்பங்களுக்கு எதிரில் மனிதனிடம் எந்த வாய்ப்பும் இருப்பதில்லை. அவற்றை எப்படியும் எதிர்கொண்டே ஆக வேண்டும். எனவேதான் அவற்றின் மூலமாக மனிதன் இறைநெருக்கத்தைப் பெற்றுக் கொள்கின்றான்.

ஷரீஅத்தின் துன்பங்கள் மற்றும் விண்ணிலிருந்து வரும் துன்பங்கள் ஆகிய இந்த இரு வகை துன்பங் -களைக் குறித்தும் திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளது.

ஷரீஅத்தின் துன்பங்களைக் குறித்து இவ்வாறு கூறப்படுகிறது.

الَّذِيْنَ يُؤْمِنُوْنَ بِالْغَيْبِ وَ يُقِيْمُوْنَ الصَّلٰوةَ وَ مِمَّا رَزَقْنٰهُمْ يُنْفِقُوْنَ ۙ

'நம்பிக்கைக் கொண்டவர்கள் மறைவான இறைவன் மீது நம்பிக்கை கொள்வார்கள். மேலும் தொழுகையினை நிலைநாட்டுவார்கள்.' (திருக்குர்ஆன் 2:4) அதாவது, நூற்றுக்கணக்கான எண்ணங்கள் தொழுகையின் போது அவர்களின் கவனத்தை திசை திருப்புகின்றன. எனினும் அவர்கள் இறைவன் மீது கவனத்தை மீண்டும் மீண்டும் செலுத்துவதன் மூலம் தொழுகையை நிலைநிறுத்துகின்றனர். மேலும் இறைவன் அவர்களுக்கு வழங்கியதிலிருந்து அவர்கள் செலவு செய்கின்றனர்.

இவையெல்லாம் ஷரீஅத்தின் வழிவரும் துன்பங்களாகும். ஆனால் மனிதன் ஆன்மீக நற்கூலியினைப் பெற்றுக் கொள்வதற்கு அவற்றை மட்டுமே சார்ந்திருக்க முடியாது. ஏனெனில் மனிதன் பலவிஷயங்களில் கவனக்குறைவுடன் நடந்து கொள்கின்றான். பலர் தொழுகையின் வெளிப்புற வடிவத்தை மட்டுமே பேணுகின்றனர். அதன் உள்ளார்ந்த சத்தை மறந்து விடுகின்றனர்.

இந்தக் காரணத்தினால்தான் மனிதன் ஆன்மீகத் தரத்தில் முன்னேற்றம் காண வேண்டும் என்ற நோக்கத்துடன் விண்ணின் துன்பங்களும் தரப்படுகின்றன. இறைவன் அதனைக் குறித்தும் திருக்குர்ஆனில் கூறுகின்றான்.

وَلَنَبْلُوَنَّكُمْ بِشَىْءٍ مِّنَ الْخَوْفِ وَالْجُوْعِ وَنَقْصٍ مِّنَ الْاَمْوَالِ وَالْاَنْفُسِ
وَالثَّمَرٰتِ ؕ وَبَشِّرِ الصّٰبِرِيْنَ ۙ الَّذِيْنَ اِذَآ اَصَابَتْهُمْ مُّصِيْبَةٌ ۙ قَالُوْٓا اِنَّا لِلّٰهِ
وَاِنَّآ اِلَيْهِ رٰجِعُوْنَ ؕ اُولٰٓئِكَ عَلَيْهِمْ صَلَوٰتٌ مِّنْ رَّبِّهِمْ وَرَحْمَةٌ
وَاُولٰٓئِكَ هُمُ الْمُهْتَدُوْنَ

மேலும் ஓரளவு பயத்தாலும் பசியாலும் செல்வங்கள் உயிர்கள் மற்றும் கனி வகைகள் ஆகியவற்றின் இழப்பினாலும் நிச்சயமாக நாம் உங்களைச் சோதிப்போம். மேலும் நீர் பொறுமையாளர் -களுக்கு நற்செய்தி கூறுவீராக. ஆவர்கள் தங்களுக்கு துன்பம் ஏற்படும்போது நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே



உரியவர்கள். மேலும் நாம் அவனிடமே திரும்பிச் செல்பவர்கள் எனக் கூறுவார்கள். இத்தகையோருக்கு தங்களின் இறைவனிடமிருந்து அருள்களும் கருணையும் இறங்குகின்றன. இவர்களே நேர்வழி பெற்றவர்கள். (2:156-158)

இத்துன்பங்கள் இறைவனிடமிருந்து நேரடியாக வருகின்றன. சில சமயங்களில் மனிதன் கடுமையான பயத்தினால் பீடிக்கப்படுகின்றான். நிலைமை இன்னும் மோசமாகி விடுமோ என்று எப்போதும் பயந்த வண்ணம் உள்ளான். சில சமயங்களில் வறுமையும் பசியும் அவனிடம் வந்து சேர்கின்றன. ஒரு சிறு தொகையைக் கொண்டே அவன் அனைத்தையும் சமாளிக்க வேண்டியதிருக்கிறது. சில சமயங்களில் அவனது செல்வத்தில் இழப்பு ஏற்பட்டு விடுகிறது. அவனது வியாபாரமும் வணிகமும் கோணலாகி விடுகின்றன. அல்லது அவனது செல்வம் கள்வர்களால் திருடப்பட்டு விடுகின்றது. சில சமயங்களில் பழங்களின் இழப்பு ஏற்படுகிறது. பழங்கள் கெட்டு விடுகின்றன. பயிர்கள் அழிந்து விடுகின்றன. அல்லது அன்பிற்குரிய குழந்தைகள் மரணித்து விடுகின்றன.

அரபு இலக்கண அகராதியின்படி சந்ததியை பழம் என்றும் அழைக்கப்படுகிறது. சந்ததியால் ஏற்படும் சோதனைகளும் கடுமையானவையே. சிலர் தமக்கு குழந்தைப் பேற்றின் அருள் கிடைக்க வேண்டும் என்பதற்காக நிம்மதியிழந்தவாறு எனக்கு கடிதங்கள் எழுதுகின்றனர். குழந்தைகளினால் ஏற்படும் சோதனைகள் எந்த அளவு கடுமையாக இருக்கக் கூடுமென்றால் சிலர் தமது குழந்தைகளின் இறப்பின் காரணமாக இறை மறுப்பாளர்களாகி விடுகின்றனர். சில சமயங்களில் குழந்தைகள் மீதான அதிக அன்பின் காரணத்தால் அவை இறைவனுக்கு ஓர் இணை போன்று ஆகி விடுகின்றன. சிலர் தமது குழந்தைகளின் நிமித்தமாக நாஸ்திகர்களாகவும், முர்தத்களாகவும், மார்க்கமற்றவர்களாகவும் ஆகி விடுகின்றனர். சிலர் கிறித்தவர்களாக மாறி விட்ட தமது குழந்தைகளுக்காக அவர்களும் கிறித்தவர்களாக மாறி விடுகின்றனர். சில குழந்தைகள் சிறிய வயதில் மரணித்து விடுகின்றன. இதனால் தமதுபெற்றோர் ஈமானை இழப்பதற்கு அவை காரணமாகி விடுகின்றன.

எப்படி இருப்பினும் மேன்மைமிக்க அல்லாஹ் கொடூரமானவன் அல்லன். கடுமையான துன்பத்தின் போது ஒருவர் பொறுமையை மேற்கொண்டால் அவருக்கு நற்கூலி தரப்படுகிறது. துன்பம் அதிகமானால் அதற்கு ஏற்ப கூலியும் அதிகமாகிறது. இறைவன் ரஹீம் (கருணையாளன்) ஆகவும், க.்.ப்பூர் (மன்னிப்பவன்) ஆகவும் சத்தார் (குறைகளை மறைப்பவன்) ஆகவும் இருக்கின்றான். மனிதன் ஈமானை விட்டும் விலகி விட வேண்டும் என்பதற்காக இறைவன் அவனுக்கு



துன்பங்களைத் தருவதில்லை. மாறாக, மனிதன் இறைவனை நோக்கிச் செல்வதற்கு அவனைத் தூண்டுவதற்காகவே துன்பங்கள் வருகின்றன. சோதனைகளின்போது ஒரு பாவி பின்தங்கி விடுகிறார். நம்பிக்கையாளர் முன்னோக்கிச் செல்கிறார் என்பது சூ.்.பிகளின் கூற்றாகும்.

ஓர் அறிவிப்பின்படி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பதினொரு மகன்கள் அன்னாரது வாழ்நாளிலே மரணித்து விட்டார்கள். நபிமார்களும் ரஸூல்மார்களும் பெற்றுக் கொண்ட உன்னத தகுதிகள் எளிதாகவும் சவுகரியத்துடனும் கிடைக்கக் கூடிய சாதாரண விஷயங்கள் மூலம் பெறப்பட்டவை அல்ல. அவர்கள் கடுமையான சோதனைகளுக்கும் துன்பங்களுக்கும் ஆளாக்கப்பட்டனர். ஆனால் அவர்கள் அவற்றைப் பொறுமையுடனும் சகிப்புத்தன்மையுடனும் தாங்கிக் கொண்டனர். பின்னர் இறைவன் அவர்களுக்கு உயர் படித்தரங்களை அருளினான். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் சந்தித்த சோதனை எவ்வளவு பெரியது என்பதை எண்ணிப் பாருங்கள். அவர்கள் கத்தியைக் கையில் எடுத்து தமது மகனை அறுத்துப் பலியிடத் துணிந்து விட்டார்கள். அவர்களின் எண்ணத்திற்கேற்ப மகனது கழுத்தில் அறுத்தபோது கத்தியின் கீழிருந்தது மகன் அல்ல, ஓர் ஆடு என்பதைக் கண்டார்கள். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் இந்த சோதனையில் வெற்றி பெற்றார்கள். இறைவன் அன்னாரது மகனையும் காப்பாற்றினான். அவர்கள் தமது எண்ணத்தின் அடிப்படையில் பின்வாங்கவில்லை என்பது குறித்து இறைவன் அன்னார் மீது திருப்தி கொண்டான்.

அன்னாரது மகன் காப்பாற்றப்பட்டது இறைவனின் அருளே ஆகும். இல்லையெனில் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவரை அறுத்துப் பலியிட்டிருப்பார்கள். எனவே தான் அவர்களுக்கு உண்மையாளர் என்ற பட்டம் தரப்பட்டது. இறைவன் ஹஸ்ரத் இப்ராஹீமிடம் இவ்வாறு கூறியதாக தவ்ராத்தில் எழுதப்பட்டுள்ளது. “இப்ராஹீமே, வானத்து நட்சத்திரங்களைப் பாரும். அவற்றை உம்மால்

எண்ணி விட முடியுமா? இவ்வாறே உமது சந்ததிகளும் எண்ணிலடங்காதவர்களாக இருப்பர்''.

துன்பத்தின் காலம் சிறியதாகவே இருந்தது. அது கடந்தும் விட்டது. ஆனால் பெறப்பட்ட அதன் நற்கூலி எத்துணை அளப்பரியது! இன்று எல்லா சாதாத்களும் (ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வழித்தோன்றல்கள்), குரைஷியரும், யூதர்களும், இன்னும் சில சமுதாயங்களும் தம்மை ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் சந்ததிகள் என்றே கூறிக்கொள்கின்றன. அது ஒரு சில மணித்துளிகள் மட்டுமே நீடித்த ஒரு நிகழ்வாகும். ஆனால் அதற்கு இறைவனிடமிருந்து அளப்பெரும் நற்கூலியைப் பெற்றுக் கொண்டார்கள். உண்மை என்னவெனில் ஒருவர் ஏதாவது துன்பத்தால் பீடிக்கப்படும் போது அவரது தக்வா (இறையச்சம்) நிரூபிக்கப்படுகிறது. எப்போது மனிதன் எல்லா கவலைகளையும் உதறி விட்டு இறைவன் மீது அக்கறை கொள் -வதற்கு முன்னுரிமை தருவானோ, எப்போது சுக வாழ்வை விட்டு விட்டு ஒரு கசப்பான வாழ்வை தழுவிக் கொள்வானோ அப்போதுதான் அவன் உண்மையான தக்வாவைப் பெற்றுக் கொள்கிறான். தொழுகைகள் மற்றும் நோன்புகளால் மட்டும் மனிதனின் அகநிலையை சரி செய்து விட முடியாது. துன்பங்கள் வருவது அவசியமானதாகும்.

عشق اوّل سرکش و خونی بود
تا گریزد ہر کہ بیرونی بود


"ஆரம்பத்தில் அன்பு இரத்த தாகத்துடன் வெகுண்டெழுந்து ஆர்ப்பரிக்கிறது. அந்நியர்களை அது அண்ட விடுவதில்லை.''

தீவிர அன்பின் முதல் தாக்குதல் ஒரு சிங்கத்தின் தாக்குதலைப் போன்றதாகும். கடந்த காலத்தில் வாழ்ந்த நபிமார்கள், ரஸூல்மார்கள் மற்றும் உண்மையாளர் -களுள் எவரும் அன்றாட சாதாரண செயல்களின் மூலமாக முன்னேறிச் செல்லவில்லை. அவர்கள் பெற்றுக் கொண்ட உன்னத தகுதிகளின் இரகசியம் என்னவெனில் அவர்கள் இறைவனுடன் ஒரு முழுமையான இணக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். ஒரு நம்பிக்கையாளரின் அனைத்து குழந்தைகளும் பலியிடப்பட்டாலும் அத்துடன் அவர் வேறு பல துன்பங்களையும் சந்தித்தாலும் அவர் தொடர்ந்து முன்னேறிச் செல்வார். ஆயிரக்கணக்கான பலவீனங்கள் இருந்த போதிலும் மனிதன் தனது உண்மையான நண்பனிடத்தில் விசுவாசத்துடன் நடந்து கொள்கின்றான். இவ்வாறிருக்க, ரஹ்மானும் (அருளாளன்) ரஹீமுமாகிய (கருணையாளன்) இறைவன் உங்களுடன் ஏன் விசுவாசத்துடன் நடந்து கொள்ளமாட்டான்? உங்களின் ஓராயிரம் குழந்தைகள் ஒருபுறமும், இறைவன் மறுபுறமும் இருந்தால் எல்லாக் குழந்தைகளையும் புறக்கணித்து விட்டு இறைவனுக்கு முன்னுரிமை தரும் அளவிற்கு அவன் மீது நேசம் கொள்ளுங்கள். துன்பங்கள் எல்லா நபிமார்களுக்கும் வந்துள்ளன. எவரும் அதற்கு விதிவிலக்கல்ல. எனவேதான், துன்பங்களைத் தாங்கிக் கொள்பவருக்கு பெரும் நற்கூலிகள் விதிக்கப்பட்டுள்ளன. இறைவன் திருக்குர்ஆனில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை நோக்கி துன்ப வேளையில் பொறுமை செய்பவர்களுக்கு நற்செய்தி நல்குமாறு கூறுகிறான். 'ஒரு காலம் இருந்தது. அப்போது நாம் இல்லை. இறைவன் நம்மைப் படைத்துள்ளான். நாம் அவனது உடைமையாவோம். மேலும் அவனிடமே நாம் திரும்பிச் செல்பவர்கள் ஆவோம்.' இத்தகையவர்களுக்கு நற்செய்தி உள்ளது. இந்தத் துன்பங்களின் காரணமாக இறைவனிடமிருந்து அருளப்படுகின்ற அருட்களும் சிறப்பு நற்செய்திகளும் தொழுகை, நோன்பு, ஸக்காத் மூலமாக கிடைக்கக் கூடியவையல்ல. ஒருவர் தொழுகையின் கடமையை முறைப்படி நிறைவேற்றினால் அது பாராட்டுக்குரியதுதான். ஆனால் எல்லாம் வல்ல இறைவன் புறமிருந்து வரும் தாக்குதல் துல்லியமான -தாகும். அதன் மூலம் நேர்வழியும் நெருக்கமும் பெறப்படுகிறது.



நமது ஜமாஅத்தின் உறுப்பினர்கள் இதனைக் கவனத்துடன் கேட்க வேண்டும். உங்களுக்கு இரண்டு வகையான கஷ்டங்களை இறைவன் விதித்துள்ளான். முதலாவதாக, ஷரீஅத்தின் கஷ்டங்கள். நீங்கள் அவற்றைத் தாங்கிக் கொள்ள வேண்டும். இரண்டாவது வகையான கஷ்டங்கள் களா மற்றும் கத்ர் (இறைநியதி

*(தொடர்ச்சி கடைசி பக்கம்...)*



# ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு

12

- மவ்லானா அப்துர் ரஹீம் தர்து (ரலி) -

**தமிழாக்கம்: S.S.H. முஹம்மது லெப்பை**

## மஸ்ஜிது முபாரக்

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் பத்திரிகை வாயிலாக மக்கள் மத்தியில் அறிமுகமாகியதன் காரணமாக ஒரு பள்ளிவாசல் கட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பொதுவாக வணக்க வழிபாடுகள் நடப்பதுதான் பள்ளிவாசல்களின் முதன்மையான நோக்கமாக இருந்தபோதிலும், இன்னும் சில பயன்களும் அதன் மூலம் ஏற்படுகின்றன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பள்ளிவாசலில் அமர்ந்திருப்பார்கள். அவர்களை சந்திக்க வருவோர் அங்கு வந்து அவர்களை சந்திப்பார்கள். அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களோடு உரையாடுவார்கள். மார்க்க விஷயங்களையும் பற்றி விவாதிப்பார்கள்.

1883 –ஆம் ஆண்டின் மத்தியில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வீட்டையொட்டி மஸ்ஜிது முபாரக் என்னும் பள்ளிவாசலுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. அக்காலத்தில் அது ஒரு சிறிய கட்டடமாகவே இருந்தது. ஏற்கெனவே அங்கிருந்த கூரையின் மேல் ஒன்றிரண்டு அறைகள் கொண்ட பள்ளிவாசல் கட்டப்பட்டது. 1883 –ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 30 –ஆம் நாள் பள்ளிவாசலுக்குச் செல்வதற்கான படிக்கட்டுகள் கட்டி முடிக்கப்பட்டன. 1883 –ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 9 –ஆம் நாள் வரையிலும் அதன் உட்புறச் சுவர்களுக்கு வெள்ளை அடிக்கப்படவில்லை.

ஆரம்ப காலத்தில் மக்காவில் வாழ்ந்த முஸ்லிம்களுக்குத் தொழுகைக்கென்று தனியாக ஓர் இடம் இருந்ததில்லை. மக்கா நகரத்தில் இருந்த கட்டடங்களுக்கு இடையே அமைந்த குறுகிய சந்துகளில்தான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது தொழுகையை நிறைவேற்றினார்கள் என்று கூறப்படுகிறது. பிறகு நம்பிக்கையாளர்கள் தம் இல்லங்களில் தொழுது வந்தனர். மதீனா நகரத்தில் இருந்த எளிய பள்ளிவாசல் கூரையில்லாததாகவும், களிமண்ணால் ஆன சுவர்களாலும் ஆனதாக இருந்தது. பிறகு சூரிய வெப்பத்திலிருந்து பாதுகாப்பதற்காக ஈச்ச மர ஓலைகளால் கூரை வேயப்பட்டது. இது வெற்றி கொள்ளப்பட்ட நாடுகளில் கட்டப்பட்ட முதல் பள்ளிவாசல் ஆகும். வணக்க வழிபாட்டுக்காக ஏற்படுத்தப்பட்ட இந்தப் பள்ளிவாசலும் ஆரம்பத்தில் கோரைப்புற்களால் சூழப்பட்ட ஒரு திறந்த வெளியாகவே இருந்தது. பிறகு செங்கற்களாலும், களிமண்ணாலும் ஆன கட்டடம் எழுப்பப்பட்டது. புற்களால் கூரை வேயப்பட்டது.

மஸ்ஜிது முபாரக் பள்ளிவாசல் இறை கட்டளைக்கேற்ப கட்டப்பட்டதாகும். அது தொடர்பாக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் பல வஹீ (இறை வெளிப்பாடு)களைப் பெற்றார்கள். அவற்றுள் ஒன்று இதுவாகும்:

"இந்தப் பள்ளிவாசல் மக்களுக்கு அருள் நிறைந் –திருக்கிறது. இதில் நுழைபவர் அமைதிக்குள் நுழைகிறார்."

"இந்தப் பள்ளிவாசல் அருளை வழங்குவதும், அருள் வழங்கப்பட்டதுமாகும்."

இந்தப் பள்ளிவாசல் இப்போது தென்புறமாக விரித்துக் கட்டப்பட்டுள்ளது. முதன் முதலில் 1907 –ஆம் ஆண்டு அது விரிவாக்கம் செய்யப்பட்டுக் கட்டப்பட்டது. பிறகு 1944 –ஆம் ஆண்டு மீண்டும் ஒருமுறை விரிவுபடுத்தப்பட்டது. தட்ப வெப்பநிலைக்கேற்ப பள்ளிவாசலில் கூரை மேல் அமைந்த திறந்த வெளியிலும் சில நேரங்களில் தொழுகை நடத்தப்பட்டதுண்டு.

## சிவப்புத் துளிகள்

அது 1884 –ஆம் ஆண்டு மே அல்லது ஜூன் மாதமாக இருக்க வேண்டும். சுபுஹ் தொழுகைக்குப் பின் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் 'மஸ்ஜிது முபாரக்' பள்ளிவாசலின் கிழக்குப் பக்கமிருந்த (இப்போது வட கிழக்கு மூலையில் அமைந்துள்ள) ஒரு சிறிய அறையில் ஓய்வெடுக்கச் சென்றார்கள். அந்த அறையின் சுவர்கள் புதிதாகப் பூசப்பட்டிருந்ததால், அங்கு குளிர்ச்சியாக இருந்தது. அங்கு வைக்கப்பட்டிருந்த கட்டிலில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் சரிந்து படுத்தார்கள். அந்தக் கட்டிலின் மீது மெத்தையோ தலையணையோ எதுவும் இல்லை. அவர்கள் மேற்குப் பக்கம் தலையை வைத்து வடபுறமாக முகத்தைச் சரித்துப்படுத்திருந்தார்கள். ஒரு கையை



தலையணைக்குப் பதிலாக தலைக்கு அடியில் வைத்திருந்தார்கள். அங்கிருந்த அப்துல்லாஹ் சனோரி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் காலை அமுக்கத் துவங்கினார்கள். அது ரமலான் மாதம் 27 –ஆம் நாள். அப்போது அப்துல்லாஹ் சனோரி (ரலி) அவர்கள் இறைவன் தம் மீது சொறிந்துள்ள இறையருட்களை எண்ணி ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார்கள். அந்நேரம் அவர்கள் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் உடல் முழுவதும் ஒரு நடுக்கம் ஏற்படுவதைக் கண்டார்கள். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அப்துல்லாஹ் சனோரி (ரலி) அவர்களைப் பார்த்தார்கள். அவர்களின் கண்கள் கண்ணீரால் நிரம்பி இருந்தது. பிறகு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தமது பாதங்களை நோக்கிப் பார்வையை செலுத்தினார்கள். அங்கு தமது கரண்டைக் காலுக்கு கீழ் ஒரு சிவப்பு நிறத் திரவத்தின் துளியைக் கண்டார்கள்; அது அப்போதுதான் விழுந்தது போல் காணப்பட்டது.

அப்துல்லாஹ் சனோரி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் அதனை விரல் நுனியால் தொட்டுப் பார்த்தேன். பிறகு அதனை முகர்ந்து பார்த்தேன். அதில் எந்த விதமான வாசனையும் காணப்படவில்லை. பிறகு அவர்களின் சட்டையின் மீதும் அவர்களின் விலாப் பக்கத்தில் இன்னொரு பெரிய துளியைக் கண்டேன். அதுவும் அப்போது பட்டதாகவே காணப்பட்டது. நான் உடனே எழுந்து நின்று அந்தத் துளிகளின் காரணத்தை அறிய சுற்றிலும் பார்த்தேன். அது ஒரு சிறிய அறையாக இருந்தது. அதன் கூரை மிகவும் தாழ்வாக இருந்தது. நான் அந்த அறையின் மூலை முடுக்கெல்லாம் தேடிப் பார்த்து அந்தத் துளிகள் எப்படி ஏற்பட்டன என்று கண்டறிய முற்பட்டேன். ஆனால் அந்தச் சிவப்புத் துளிகள் எதனால் ஏற்பட்டன என்ற காரணத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. எனவே மீண்டும் கட்டிலில் அமர்ந்து ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் கால்களை அமுக்கத் துவங்கினேன். சற்று நேரம் சென்றபின், அவர்கள் எழுந்து வெளியே சென்று பள்ளியில் அமர்ந்தார்கள். நான் அவர்களைப் பின்தொடர்ந்து அங்கு சென்று அவர்களின் தோளைப் பிடித்து விடுவதற்காக அவர்களின் பின்னால் அமர்ந்தேன். பிறகு நான் அவர்களிடம் சிவப்புத் துளிகளைப் பற்றிக் கேட்டேன். அவர்கள் அதில் ஆர்வம் காட்டாதவர்களாக பதில் அளித்தார்கள். எனவே நான் மீண்டும் அவர்களிடம் அதே கேள்வியைக் கேட்டேன். அப்போது ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள், நீங்கள் எந்த துளிகளைப் பற்றிக் கேட்கிறீர்கள் என்று கேட்டார்கள். நான் அவர்களின் சட்டையின் மீது பட்டிருந்த ஒரு துளியைச் சுட்டிக் காட்டினேன். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அதைப் பார்த்தார்கள். பிறகு அன்னார் (அலை) அவர்கள் கஷ்ஃப் எனும் ஆன்மீகக் காட்சியில் காணப்படும் சில விஷயங்கள் பௌதீக உலகிலும் நிகழும் என்பதை சில உதாரணங்கள் மூலம் விளக்கினார்கள். உண்மையில் என்ன நடந்தது என்பதை ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் பின்வரும் வார்த்தைகளில் விளக்கினார்கள்:

“விழித்திருந்த நிலையில் நான் கண்ட ஓர் ஆன்மீகக் காட்சியில் ஓர் அழகான கட்டடத்தைக் கண்டேன். அதில் ஓர் அரியணை இருந்தது. அதில் கம்பீரமான உருவம் வீற்றிருந்தது. அது அல்லாஹ் ஆவான். அந்த தெய்வீக நீதிமன்றத்தில் நான் ஒரு பணிவான அதிகாரியாக இருக்கிறேன். நான் சில தீர்ப்புகளை எழுதி அல்லாஹ்வின் சமூகத்தின் முன் கையெழுத்துப் பெறுவதற்காக சமர்ப்பிக்கிறேன். ஒரு தந்தைக்குரிய பாசத்தோடு நானும் ஓர் அரியணையில் அமர்த்தப்பட்டிருக்கிறேன். பிறகு அவன் தனது எழுதுகோலை சிவப்பு மை இருந்த ஒரு குடுவைக்குள் முக்கினான். சற்று உதறினான். பிறகு கையெழுத்திட்டான். நீங்கள் பார்த்த சிவப்புத் துளிகள் அவன் எழுதுகோலை உதறியபோது தெரித்தவையாகும். அப்துல்லாஹ் சனோரி (ரலி) அவர்களிடம் அவரது உடையிலோ, தொப்பியிலோ சிவப்புத் துளி விழுந்திருக்கிறதா எனப் பார்க்கும்படிக் கேட்டுக் கொண்டார்கள். தமது தொப்பியிலும் ஒரு துளி பட்டிருப்பதைப் பார்த்து அவர் மகிழ்ச்சியடைந்தார்.

அதிசயமான இந்த நிகழ்ச்சியைக் கண்டு அப்துல்லாஹ் சனோரி (ரலி) அவர்கள் மிகவும் ஆச்சரியமுற்றார்கள். இந்த தெய்வீகக் காட்சிக்குத் தாமும் ஒரு சாட்சியாக இருப்பதால், சிவப்புத் துளிகள் பட்ட அந்தச் சட்டையைத் தமக்கும் தரும்படி ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களைக் கேட்டுக் கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உணர்வுகளைத் தம்மகத்தே கொண்டிருந்த ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள், தம்மைப் பின்பற்றுவோர் அந்தச் சட்டையை வழிபடத் துவங்கி விடக்கூடுமே என்று எண்ணி சற்று தயங்கினார்கள். ஆனால் அப்துல்லாஹ் சனோரி அவர்கள் மேலும் மேலும் வற்புறுத்தவே, அவர் இறக்கும்போது அவரோடு சேர்த்து அந்தச் சட்டையையும் அடக்கம் செய்து விட வேண்டும் என்ற நிபந்தனையோடு அந்தச் சட்டையை அவருக்கு வழங்கினார்கள். அந்நேரம் அப்துல்லாஹ் சனோரி (ரலி) அவர்களுக்கு 20 வயதுதான் நிரம்பியிருந்தது. அவர் முதன் முறையாக காதியானுக்கு வந்து இரண்டு

ஆண்டுகள் தாம் ஆகியிருந்தன. தமது எஞ்சிய வாழ்நாள் முழுவதும் அவர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் உண்மையான சீடராக விளங்கினார். அவர் 1927 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 7 ஆம் நாள் ஒரு வெள்ளிக்கிழமையன்று மரணமடைந்தார்கள். 43 ஆண்டுகளாக அவர் அல்லும் பகலும் பொக்கிஷமாகப் பாதுகாத்து வந்த தெய்வீக மைத்துளி பட்ட அந்தச் சட்டையோடு சேர்த்து அடக்கம் செய்யப்பட்டார். அந்தச் சட்டையை அவர் பிரித்ததேயில்லை. அது மறுக்க முடியாத இறைவனின் தெளிவான அடையாளமும், இறைவன் புறமிருந்து மனிதன் பெறக்கூடிய விலைமதிக்க முடியாத பரிசாகவும் விளங்கியது. அவர் அதனைப் பொக்கிஷமாகப் பாதுகாத்துப் போற்றி வந்தார். அதனை மிகவும் நேசித்தார். தாம் மிகவும் நேசித்த தமது அன்பிற்குரிய தலைவரிடமிருந்து தமக்குக் கிடைத்த விலைமதிப்பற்ற பரிசாகக் கருதினார். அவர் அதனைப் பாதுகாப்பதற்கென தனியாக மரத்தாலான ஒரு பெட்டியை செய்தார். அதன் மேல் பக்கம் கண்ணாடி பொருத்தப்பட்டிருந்தது. சிவப்புத் துளிகள் வெளியே தெரியும்படிச் சட்டையை மடித்து அதனுள் வைத்துப் பாதுகாத்து வந்தார். நானே (கட்டுரையாசிரியர் அப்துர் ரஹீம் தர்து) அதனைப் பலமுறை பார்த்திருக்கிறேன். ஆயிரக்கணக்கான மக்கள் அந்த தெய்வீக அடையாளத்தைக் கண்டு சாட்சி சொல்ல வேண்டுமென்பதற்காக இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் ஆணையை ஏற்று பலரும் காணும்படிச் செய்தார். அவரே அதனைப் பலநேரம் சோகமும், மகிழ்ச்சியும் ஒரு சேரப் பார்த்துப் பரவசமடைவார். விலைமதிப்பற்ற அந்தப் பரிசைக் கண்டதும் அவரது முகம் மகிழ்ச்சியால் பிரகாசிக்கும். ஆனால் தம் வாழ்நாள் முழுவதும் தாம் சேவை செய்த தமது எஜமானரைப் பிரிந்து இருப்பதை எண்ணி மறு நிமிடம் வருத்தம் மேலிடும்.

இயேசு கிறிஸ்துவோடு தொடர்புடைய புனிதப் பொருள்கள் என்று கருதப்படும் பொருள்கள் மீது ஆரம்பகால கிறிஸ்தவர்கள் கொண்டிருந்த நம்பிக்கை, அவற்றோடு அவர்கள் நடந்து கொண்ட விதம் ஆகியவற்றோடு ஒப்பிடும்போது நாம் மேலே குறிப்பிட்ட அணுகுமுறை எவ்வளவு வித்தியாசமாக அமைந்திருக்கிறது! அந்தப் பொருள்களுக்குப் பல அற்புத ஆற்றல்கள் இருப்பதாக அவர்கள் நம்பியதாக ஆதாரப்பூர்வமான அறிவிப்புகள் கூறுகின்றன. அந்தப் பொருள்களைத் தொடுவதன் மூலமே பல அற்புதங்கள் நிகழ்ந்ததாக அறிவிப்புகள் கூறுகின்றன. இறுதியில திருச்சபையே அப்படிப்பட்ட மூடநம்பிக்கைகளையும், பழக்கவழக்கங்களையும் ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று.

இறை நம்பிக்கையற்ற இயற்கைவாதிகள் மேலே கூறப்பட்ட சிவப்புத் துளிகள் பற்றிய சம்பவத்தைக் கேட்டால் சிரிக்கவும், ஏளனமும் செய்வார்கள். ஒரு காலத்தில் மிகவும் புகழ்பெற்று விளங்கிய 'தட்டையான பூமி' (Flat Land) என்ற நூலை எழுதிய ஆசிரியர் 1926 –ஆம் ஆண்டு மரணித்தார். உலகமும் தட்டையானது; அதிலுள்ள அனைத்துப் பொருள்களும் தட்டையானவை என அந்நூல் விவரிக்கின்றது. அக்காலத்தில் வாழ்ந்த மக்கள் முப்பரிணாமம் என்ற ஒன்றையே அறியாத காரணத்தால் இக்கொள்கை அவர்களுக்கு வினோதமாகத் தோன்றவில்லை. அவர்களுள் ஒருவர் சற்று விபரம் தெரிந்தவராக இருந்தார். அவருடைய சிந்தனைகளும், கருத்துகளும் மற்றவர்களின் சிந்தனையைப் பாதித்து அவர்களுடைய ஆவலைத் தூண்டிவிடக் கூடாது என்பதற்காக அவர் சிறையில் அடைக்கப்பட்டார். அவர்களுடைய கண்ணோட்டத்தில் அவருக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு நியாயமானதே!

முப்பரிணாமத்தை அறிந்து கொள்ளக் கூடிய ஆற்றல் அவர்களிடம் இல்லை. அவர்களின், பார்த்து அறியும் புலனறிவு அவர்களுக்குச் சாதகமாக இருந்தது. கண்ணால் கண்டு உணர முடியாத ஒன்று இருப்பதாக அவர்களால் கற்பனை கூட செய்ய முடியாதிருந்தது. எனவே நம்பிக்கை கொள்ளாத உலகவாதிகள் தட்டையான உலகில் வாழ்ந்து வந்தார்கள். அவர்களின் புலனறிவு உலகிலுள்ள குறிப்பிட்ட சில விஷயங்களை மட்டுமே அவர்களை உணரச் செய்தது. அவர்களுடைய அறிவு முழுமையானதென்றோ, அவர்கள் அறிந்தவற்றிற்கு அப்பால் வேறொன்றும் இல்லை என்றோ அவர்களால் கூற முடியாது. எனவே அவர்கள் அறிந்திராத பிற பரிணாமங்களும் இருக்க முடியும் என்பதை அவர்கள் மறந்து விடலாகாது.

பரந்த ஆன்மீக உண்மையால் நிரம்பிக் கிடக்கும் ஓர் உலகிற்கு இட்டுச் செல்லும் வழியைக் காணும் கண்களை



அவர்கள் பெறவில்லை. ஆன்மீக உலகம் என்பது அதற்கே உரிய சில சட்ட திட்டங்களைக் கொண்டிருக்கிறது. அவ்வுண்மைகளை உலகியல் வாதிகள் மறுப்பது சரியன்று. ஒரு விஷயத்தைப் பற்றிய அறிவு தனக்கு இருக்கிறது என்று ஒருவன் கூறுவதற்கு முன், அது தொடர்பான அனுபவம் அவனுக்கு இருக்க வேண்டும். காற்றில் ஒலி அலைகள் பரவுவதைப் பற்றி ஒன்றுமே அறியாத ஓர் உலகியல் அறிஞரோ, சமையல் கலைஞரோ கம்பியின்றிச் செயல்படும் வானொலிக் கருவியின் விஷயத்தில் தலையிடுவது அறிவுடைமை ஆகாது. அடிப்படையறிவு இல்லாத விஷயத்தில் விவாதத்தில் ஈடுபடுவது இயலாத காரியமாகும்.

எப்பொழுதுமே இருளிலேயே உலவுவதால் சந்தேகப் பிராணிகள் எப்பொழுதும் சந்தேகத்திலேயே இருப்பார்கள். அவர்களால் வெளிச்சத்தைக் காண முடியாது. அறிவாற்றலில் அவர்கள் குருடராகவும், அறிவற்றவர்களாகவும் இருக்கிறார்கள். தம்முடைய இருப்பைப் பற்றியே அவர்கள் அறியாதவர்களாக இருக்கின்றனர்.

உண்மையைத் தேடும் நேர்மையாளர்கள் ஆதாரங்களைக் கேட்பார்கள். ஆனால் அவற்றைப் புரிந்து கொள்பவர்களுக்கு மட்டும் தான் ஆதாரங்களைக் கொடுக்க முடியும். அனுபவம் என்பது மிகப்பெரும் ஆதாரம் ஆகும். கண்டுணர்தல் மிகப்பெரும் காரணியாகும். பார்த்தறிவது நம்பிக்கைக்குரிய ஒன்றாகும். இங்கே கூறப்பட்ட இவருவம் எக்காலத்திலும் பொய் கூறாதவர்கள் ஆவர். அவர்கள் புத்தி தடுமாறியவர்களோ, அறிவு வளர்ச்சி அற்றவர்களோ அல்ல. அவர்கள் கண்ட காட்சிக்கு நம்மால் எந்தவித உள் நோக்கமும் கற்பிக்க முடியாது. அவர்களுள் ஒருவர் ஒரு காட்சியைக் காண்கிறார்; அக்காட்சியில் கண்ட துளிகள் உண்மையிலேயே இவ்வுலகில் விழுந்திருக்கிறது என்பதையே அறியவில்லை. அவர்களில் இரண்டாமவர் முதலாமர் கண்ட காட்சியைப் பற்றி எதுவும் அறியாத நிலையில் அந்தத் துளிகளைக் காண்கிறார். பிறகு அந்தத் துளிகள் ஆயிரக்கணக்கான மக்களால் காணப்படுகிறது. அந்தத் துளிகள் எப்படி விழுந்திருக்கக் கூடும் என ஓர் ஆய்வு உடனடியாக அந்த இடத்திலேயே நடத்தப்படுகிறது. எந்தக் காரணமும் கண்டுபிடிக்க முடியவில்லை. இதற்கு மேல் ஆதாரமாக வேறு என்ன தேவைப்படுகிறது? இது போன்ற ஆதாரங்களின் அடிப்படையிலேயே பிற விஷயங்களில் முடிவுகள் எடுக்கப்படுகின்றன. பிறகு ஏன் மக்கள் இப்போது கூறப்பட்ட நிகழ்வை நம்ப மறுக்க வேண்டும்?

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களைச் சுற்றிலும் பல எதிரிகள் இருந்தனர். அவர்கள் இதன் மீது பலவகையான ஆட்சேபனைகளை எழுப்பி இருக்க முடியும். அதன் மூலம் அந்த அடையாளத்தின் முக்கியத்துவத்தை அழித்திருக்க முடியும். ஆனால் மீண்டும் மீண்டும் உறுதியாக எடுத்துக் கூறப்பட்ட பின்பும் எவரும் அதனை மறுக்க முன்வரவில்லை. அவர்கள் கேட்டுக் கொண்டதெல்லாம் அப்துல்லாஹ் சனோரி அவர்கள் சத்தியம் செய்து கூற வேண்டும் என்பது மட்டும்தான். சத்தியம் செய்வதற்கான வார்த்தைகளையும் எதிரிகளே வரையறுத்துக் கூறினர். ஆனால் 1919 –ஆம் ஆண்டு அமிர்தசரஸ் நகரில் மிகப் பெரிய எதிரிகள் மத்தியில் அவர் அவ்வாறு சத்தியம் செய்தபோது அவர்கள் அனைவரும் வாயடைத்துப் போயினர்.



முஸ்லிம்கள் இந்த சம்பவத்தை மறுக்க முடியாது. ஏனென்றால் அவர்கள் ஹஸன் பஸரீயின் வாழ்வில் நடந்த ஒரு சம்பவத்தை ஏற்றுக் கொள்கிறார்கள். அதில் ஹஸன் பஸரீ ஒரு கனவு கண்டார். அதில் தாம் ஷாமூன் என்பவருக்கு வழங்கிய ஒரு நற்சாட்சிப் பத்திரத்தை அவர் திரும்ப அனுப்பி விடுகிறார். ஹஸன் பஸரீ கண் விழித்துப் பார்த்தபோது அந்தப் பத்திரம் தம் அருகில் இருப்பதைக் கண்டார். (தத்கிரத்துல் அவ்லியா பக்கம் 40)

அதே போன்று அப்துல்லாஹ் பின் ஜலா ஒரு கனவு கண்டார். அந்தக் கனவில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவருக்கு ஒரு ரொட்டியை வழங்குகிறார்கள். அதில் பாதியை அவர் சாப்பிடுகிறார்; அவர் கண்விழித்துப் பார்த்தபோது மீதிப் பாதி ரொட்டி தம்மிடம் உள்ளதைக் கண்டார். (தத்கிரத்துல் அவ்லியா பக்கம் 498)

அவ்வாறே ஐந்து ரொட்டிகள் மற்றும் இரண்டு மீன்களால் 5000 –க்கும் மேற்பட்ட ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் உணவளிக்கப்பட்டதாக கிறித்தவர்கள் நம்புகின்றனர். அவர்கள் அனைவரும் வயிறார உண்டனர். எஞ்சியிருந்த உணவுத் துண்டுகளை பன்னிரெண்டு கூடைகளில் அள்ளினர். (காண்க: மத்தேயு 14:15–21)

بسم الله الرحمن الرحيم

نَحْمَدُهٗ وَنُصَلِّیْ عَلٰی رَسُوْلِهِ الْکَرِیْمِ وَعَلٰی عَبْدِهِ الْمَسِیْحِ الْمَوْعُوْدِ

خدا کے فضل اور رحم کے ساتھ

ھوالنّاصر

واجعل لي من لدنك سلطانا نصيرا
إنا فتحنا لك فتحا مبينا
ولقد نصركم الله ببدر وأنتم أذلة
امام جماعت احمدیہ


# ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் தூதுச்செய்தி

இஸ்லாமாபாத், யூ.கே
MA 18.10.2022

இந்திய மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் அமைப்பின் அன்பிற்குரிய உறுப்பினர்களே!

اَلسَّلَامُ عَلَیْکُمْ وَرَحْمَةُ اللّٰهِ وَبَرَکَاتُهٗ

இந்திய மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் அமைப்புக்குத் தனது ஆண்டு இஜ்திமாவை நடத்தும் நல்வாய்ப்பு கிடைத்துக் கொண்டிருக்கிறது என்பதை அறிந்து எனக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. அல்லாஹ் இதை எல்லா வகையிலும் அருளுக்குரியதாக ஆக்குவானாக. மேலும் இதன் நல்ல விளைவுகளை உருவாக்குவானாக. ஆமீன்.



இந்த சந்தர்ப்பத்தில் தூதுச்செய்தி அனுப்புமாறு என்னிடம் விண்ணப்பிக்கப் –பட்டிருக்கிறது. எனது தூதுச்செய்தி என்னவெனில், உங்கள் பிள்ளைகளின் தர்பிய்யத்தின் பக்கம் சிறப்பான கவனம் செலுத்துங்கள். அவர்களுக்கு நேரம் ஒதுக்குங்கள். அவர்களின் கல்வியின் பக்கம் கவனம் செலுத்துங்கள். அவர்களை ஜமாஅத்துடன் இணைப்பதன் பக்கம் கவனம் செலுத்துங்கள். பிள்ளைகளுக்கு நல்ல தர்பிய்யத் உருவாகிக் கொண்டிருக்கின்ற, பிள்ளைகள் சமூகத்தின் ஒரு நல்ல பகுதியாக மாறி, நாடு மற்றும் சமுதாயத்தின் முன்னேற்றத்தில் பங்கு பெறுபவர்களாகும் வகையிலான அத்தகைய சூழ்நிலையை உங்கள் வீடுகளில் உருவாக்குங்கள்.

பிள்ளைகளுக்குத் தர்பிய்யத் கொடுப்பது என்பது – அதுவும் குறிப்பாக ஒவ்வொரு காலடியிலும் ஷய்த்தானால் உருவாக்கப்பட்ட ஆர்வங்கள் பல்வேறு கோணங்களில் ஒவ்வொரு நாளும் நமக்கு முன்னால் வந்து கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் ஒன்றும் எளிதான வேலை இல்லை என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் அல்லாஹ் துஆக்களையும், வழிமுறைகளையும் கூறியிருக்கிறான் என்றால் அது நாம் விரும்பினால் நம்மையும் நமது பிள்ளைகளையும் ஷய்த்தானின் தாக்குதல்களிலிருந்து காப்பாற்ற முடியும் என்பதற்காகத்தான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எத்தகைய புரட்சியை உருவாக்குவதற்காக அல்லாஹ்விடமிருந்து அனுப்பப்பட்டார்கள் என்றால், அதன் பங்கைப் பெறுவதற்காக நாம் நமது அனைத்து தகுதிகளையும், திறமைகளையும் பயன்படுத்த வேண்டும்; மேலும் நமது சந்ததிகளிடமும் அந்த ஆன்மாவை ஊத வேண்டும். நமது குறிக்கோள்களுக்காக துஆக்களையும் செய்ய வேண்டும். சமூகத்தின் இந்த எல்லா அசுத்தங்கள் மற்றும் கறைகள் ஆகியவை இருந்தாலும், நாம் ஷய்த்தானை வெற்றியடைய விடக் கூடாது என்ற தர்பிய்யத்தையும் அவர்களுக்கு கொடுக்க வேண்டும். மேலும் உலகில் இறைவனின் ஆட்சியை நிலைநாட்டுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

திருக்குர்ஆனில் ஹஸ்ரத் ஸகரியா நபி (அலை) அவர்களை ஆதாரமாகக் கொண்டு சூரா அன்பியாவில் رَبِّ لَا تَذَرْنِیْ فَرْدًا وَّ اَنْتَ خَیْرُ الْوٰرِثِیْنَ அதாவது என் இறைவா! என்னைத் தனியாக விட்டு விடாதே. மேலும் நி எல்லா வாரிசுகளையும் விட சிறந்தவனாவாய் என்ற துஆவைப் பற்றிய குறிப்பும் இருக்கிறது. (21:90) இந்த துஆவிலும் அல்லாஹ்வை வாரிசுகளில் மிகச் சிறந்தவன் என்று கூறியிருக்கும்போது, பிள்ளைகளைப் பற்றிய துஆ வெறும் பிள்ளைகளை உருவாக்க வேண்டும்; உலக விவகாரங்களில் வாரிசுகள் உருவாக்க வேண்டும் என்பதற்காக மட்டும் அல்ல; மாறாக உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கும் அத்தகைய குழந்தைகள் அல்லாஹ்விடமிருந்து கிடைக்க வேண்டும் என்பதாகும். மேலும் எவர்கள் தாமும் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குபவர்களாக இருக்கின்றார்களோ அவர்கள்தான் இத்தகைய துஆவை வேண்ட முடியும் என்பதும் வெளிப்படையானதாகும். மனிதன் உலகாதாயத்தில் மூழ்கியிருக்கும்போது, அவர் நல்ல வாரிசை எப்படி வேண்டுவார்?

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்: "எனவே நீங்களும் நல்லவர்களாகுங்கள். மேலும் உங்கள் பிள்ளைகளுக்காக நன்மை மற்றும் இறையச்சத்திற்கான ஓர் அழகிய முன்மாதிரியாக ஆகிவிடுங்கள். மேலும் அவர்களை இறையச்சமுடையவர்கள் மற்றும் மார்க்கப் பற்றுள்ளவர்களாக்க முயற்சி செய்யுங்கள்; துஆ செய்யுங்கள். அவர்களுக்காக செல்வத்தை சேர்த்து வைப்பதற்கு எந்த அளவுக்கு முயற்சி செய்கிறீர்களோ அந்த அளவுக்கு இந்த விஷயத்திலும் முயற்சி செய்யுங்கள்." (மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 109 இங்கிலாந்து பதிப்பு 1985)

எனவே பிள்ளைகள் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை கொடுப்பவர்களாகவும் நமது, அதாவது, தாய் தந்தைக்கும் குடும்பத்தின் கண்ணியத்தை நிலைநாட்டுபவர்களாகவும், தனது பாட்டனார், முப்பாட்டனார் ஆகியோரின் கண்ணியத்தை நிலைநாட்டுபவர்களாகவும் இருக்க வேண்டும் என்ற துஆவுடனும், விருப்பத்துடனும் குழந்தை ஆசை இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்: "எவர்கள் எப்போதும் நன்மையில் முன்னேறியவாறு காலெடுத்து வைப்பவர்களாக இருக்கின்றார்களோ அவர்களுக்கே இறைவனின் உதவி கிடைக்கின்றது."

எப்போதும் முன்னேறியவாறு காலெடுத்து வைப்பவர்களாக இருக்கிறார்களோ என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறிய பின்னர் தொடர்ந்து இவ்வாறு கூறுகிறார்கள்: "எவர்கள் ஓரிடத்தில் நின்று விடுவதில்லையோ, அவர்களின் முடிவுதான் நல்லதாக இருக்கிறது."

மேலும் முடிவு நல்லதாக இருப்பதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்: "உங்களுக்காகவும் உங்கள் மனைவி மக்களுக்காகவும் நிரந்தரமாக துஆ செய்து கொண்டிருக்க வேண்டும்."



அல்லாஹ் நம்மில் ஒவ்வொருவரும் பிள்ளைகளுக்கு மிகச் சிறந்த முன்மாதிரியாக இருப்பதற்கும், உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை கொடுப்பவர்களாக இருப்பேன் என்ற உறுதிமொழியை நிறைவேற்றுபவர்களாக இருப்பதற்கும் அல்லாஹ் நமக்கு நல்வாய்ப்பை வழங்குவானாக. அல்லாஹ் நமது பிள்ளைகளையும் எப்போதும் நமது கண்களுக்குக் குளிர்ச்சியானவர்களாக ஆக்கி வைப்பானாக. மேலும் பின்னர் இந்தத் தொடர் அடுத்து தொடர்ந்து கொண்டும் இருக்கட்டுமாக. ஆமீன்.

வஸ்ஸலாம்.

எளியவன்

மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது

ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

*(15-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

நோக்கத்திற்காகவே உயிரை மாய்ப்பவர்களையும் சிறிதும் பொருட்படுத்த மாட்டேன்." (மல்∴பூஸாத் தொகுதி 1 பக்கம் 303)

ஆக, எனது ஜமாஅத்தின் ஒவ்வொரு நபரும் இறையச்சத்தில் நடப்பவராக இருக்க வேண்டும். அதுவன்றி, எந்நேரமும் உலகத்தின் துன்பமே தன்னை உண்பதாக அவர் இருக்கக் கூடாது என்ற வேதனை அன்னாருக்கு இருக்கிறது.

கிலா∴பத்துடைய அருள்களைப் பற்றி நினைவு கூருவதும், ஜமாஅத் மக்களின் உள்ளங்களில் கிலா∴பத் உடனான தொடர்பையும் விசுவாசத்தையும் அதிகப்படுத்து -வதும், மிக உறுதியாக நிலைநாட்டுவதற்கு முயற்சி செய்வதும்தான் நமது இஜ்திமாக்களின் மிக முக்கியமான ஒரு நோக்கமாகும் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.

சந்தேகமின்றி, கிலா∴பத் அல்லாஹ்விடமிருந்து கிடைத்த ஒரு மாபெரும் அருளாகும். அது இறுதி காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் அன்பிற்குரிய ஜமாஅத்திற்குக் கிடைக்கப் பெற்றுள்ளது. எனவே, இறைவனின் இந்தக் கயிற்றை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்வது நம் அனைவரின் கடமையாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: "உங்களுடைய முன்னேற்றங்கள் கிலா∴பத்துடன் ஒன்றியிருக்கின்றன என்பதை நீங்கள் நன்றாக நினைவில் கொள்ளுங்கள். எந்த நாளில் நீங்கள் இதைப் புரியவில்லையோ, மேலும், இதை நிலைபெறச் செய்யவில்லையோ அந்த நாளே உங்களது அழிவு மற்றும் நாசத்திற்கான நாளாக இருக்கும். ஆனால், நீங்கள் அதன் உண்மைத் -துவத்தைப் புரிந்தவாறு இருந்தால், அதை நிலைபெறச் செய்தால், பிறகு, முழு உலகமும் சேர்ந்து உங்களை அழிக்க நினைத்தாலும் அழிக்க முடியாது."

அல்லாஹ் உங்களுக்கு இந்த இஜ்திமாவிலிருந்து முழுமையான முறையில் பலன் பெறுவதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக! அல்லாஹ் உங்களில் ஒவ்வொருவரையும், இந்த இஜ்திமாவுடன் தொடர்புடைய அருள்கள் அனைத்தையும் பெற்றுக் கொள்ளக் கூடியவர்களாக ஆக்குவானாக!

நாம் அனைவரும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், இத்தகைய அருளுக்குரிய சபைகளில் கலந்து கொள்ளக் கூடியவர்களுக்காக செய்த, தமது ஜமாஅத் மக்களுக்காக செய்த அந்த துஆக்கள் அனைத்திற்கும் வாரிசுகளாக ஆவோமாக! ஆமீன்.

வஸ்ஸலாம்.

எளியவன்

மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது

ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ்

# திருக்குர்ஆனின் வசனங்கள் நீக்கப்பட்டுள்ளனவா...?

(தஃப்ஸீரே கபீரிலிருந்து.....)

2



தமிழாக்கம்: மவ்லவி M. முஹம்மது சுல்தான் முஹீயுத்தீன்

அல்லாஹுத்தஆலா கூறுகின்றான்:

إِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَإِنَّا لَهُ لَحَافِظُونَ இந்த (குர்ஆனாகிய) அறிவுரையை நாமே இறக்கினோம். நிச்சயமாக நாமே இதனைப் பாதுகாப்போம். (திருக்குர்ஆன் 15:10)



இங்கு அல்லாஹுத்தஆலா இதன் நிரந்தர பாதுகாப்பின் பொறுப்பை ஏற்றுள்ளான். மேலும் நாம் நிரந்தரமாக திருக்குர்ஆனைப் பாதுகாத்து வருவோம் என்று கூறுகின்றான். ஆகவே எந்த வேதத்தின் பாதுகாப்பின் பொறுப்பை சுயமே அல்லாஹ் ஏற்றிருக்கிறானோ அதில் மறந்து விட அல்லது அதில் ஏதேனும் வசனம் நீக்கப்படுவதன் பொருள் என்ன? மேலும் ஒருவேளை அது மறந்து விட்டது அல்லது அதில் நீக்கப்பட்டு விட்டது என்றால் பிறகு அதன் பாதுகாப்பின் எவ்வித அர்த்தமும் இருப்பதில்லை.

உண்மை யாதெனில் திருக்குர்ஆனின் எந்த ஒரு பகுதியும் நீக்கப்படவில்லை. அதன் ஒவ்வொரு வார்த்தையும் செயல்படத்தக்கவை ஆகும். மேலும் இது மறுமை வரை நிலைபெற்றிருக்கக்கூடிய ஷரீஅத் ஆகும்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீ:.பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் ஒருமுறை கனவில் ஒருவரிடம் திருக்குர்ஆனின் ஒவ்வொரு வார்த்தையும் ஒவ்வொரு ஸபர் மற்றும் அனைத்து ஸேரும் தன்னுள் அர்த்தத்தை உள்ளடக்கியதாக இருக்கின்றது. மேலும் திருக்குர்ஆனில் சிறு சிறு வித்தியாசங்களால் அதன் பொருள் மாறி விடுகின்றது. மேலும் எந்த அளவுக்கு மதிநுட்பம் மிக்கவை என்றால் வேறெந்த வேதமும் அதற்கு இணையாக உதாரணத்தை எடுத்து வைக்க முடியாது. ஆயினும் எல்லா நுணுக்கமான விஷயங்களும் எல்லாருக்கும் புலப்பட்டு விட வேண்டும் என்பது அவசியம் இல்லை. ஆயினும் எல்லா காலகட்டத்திலும் திருக்குர்ஆனின் சில புதிய அர்த்தங்கள் புலப்படுகின்றன. மேலும் அது தவிர இறைவன் அடுத்தவர்களுக்காக சில அதிகப்படியான அர்த்தங்களையும் வைத்திருக்கின்றான். மேலும் இந்தத் தொடர் இவ்வாறு தொடர்ந்து கொண்டிருக்கின்றது. எதுவரை என்றால் மறுமை வந்து விடும் என்று கூறுவதாகக் கண்டேன்.

திருக்குர்ஆனின் வசனங்கள் நீக்கப்பட்டவையாக கருதுகின்ற அந்த மக்கள் தங்களது வாதத்திற்கு ஆதாரமாக, இந்த வசனம் நீக்கப்பட்டு விட்டது அல்லது அல்லாஹுத்தஆலா இந்த வசனத்தை நீக்கி விட்டான் என்று அல்லாஹுத்தஆலா தம்மிடம் கூறியதாக ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் எவ்வித கூற்றையும் ஆதாரமாக எடுத்துரைப்பதில்லை. அல்லது ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது கூட்டத்திற்கு மக்கள் வந்திருந்து, அன்னார், எனக்கு இன்று இரவு இந்த வசனம் நீக்கப்பட்டு விட்டது என்று இல்ஹாம் வந்தது என்று கூறியதாகவும் இல்லை. மாறாக அவர்கள் இந்த வசனம் இந்த வசனத்துக்கு முரணாக பொருள் தருகின்றது. எனவே இதில் ஒரு வசனம் நீக்குகின்றதாக இருக்கின்றது. மற்றொன்று நீக்கப்படுவதாக இருக்கின்றது என்று மட்டுமே பொருள் கொடுக்கின்றார்கள். இவ்வாறாக அவர்களுக்குப் புலப்படாத வசனங்களை எல்லாம் அவர்கள் நீக்கப்பட்டவையாகத் தீர்மானித்து விடுகின்றார்கள். மேலும் இது குறைமதியின் காரணத்தினால் மட்டுமே ஏற்படுகின்றது. ஆனால் விந்தைக்குரிய விஷயம் யாதெனில் இங்கு அவர்கள் நபிமொழிகள் திருக்குர்ஆனை நீக்கப்பட்டதாக ஆக்குவதில்லை என்று கூறுகிறார்கள். மேலும் இந்த விஷயம் உண்மையே ஆகும். நாமும் கூறுகிறோம். ஒன்றை விட்டு விடுங்கள். கோடிக்கணக்கான நபிமொழிகளும் கூட திருக்குர்ஆனின் எந்த ஒரு

பகுதியையும் நீக்கப்பட்டதாக கூற முடியாது. மறுபுறம் அவர்கள் தங்களது யூகத்தைப் பின்பற்றி திருக்குர்ஆனின் வசனங்களை நீக்கப்பட்டதாகத் தீர்மானித்து விடுகின்றார்கள். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். நீக்கப்பட்ட வசனங்களின் இந்த வகை, அதாவது, அதன் வார்த்தைகளும் நீக்கப்பட்டுள்ளதாகவும் கட்டளைகளும் நீக்கப்பட்டு விட்டன என்றும் அவர்கள் கூறும் இந்த வகை வசனங்களுக்கு அவர்கள் எவ்வித உதாரணத்தையும் எடுத்து வைப்பதில்லை. இத்தனைக்கும் அவர்கள் ஏதேனும் உதாரணத்தை எடுத்து வைத்திருக்க வேண்டும். மேலும் இந்த வசனம் திருக்குர்ஆனில் இருந்தது; மேலும் அதன் வார்த்தைகள் மற்றும் கட்டளைகள் இரண்டுமே நீக்கப்பட்டு விட்டன என்று கூறி இருக்க வேண்டும். கிப்லா மாற்றப்பட்டது தொடர்பாக மட்டுமே அவர்கள் இந்த கட்டளை திருக்குர்ஆனில் இருந்தது என்று கூறுகிறார்கள். ஆனால் அதன் வார்த்தைகளை அவர்கள் எடுத்து வைப்பதில்லை. எனவே அவர்களது இந்த வாதம் நம்பத்தகுந்ததாக கருத முடியாது.



பிறகு எந்த வசனங்களைப் பற்றி அவற்றை சஹாபிகளும் மறந்து விட்டார்கள் என்று கூறுகிறார்களோ அவற்றை மறப்பதும் கூட ஓர் அற்புதமாகி விடும். ஒருவேளை எப்போதாவது அவ்வாறு நடந்திருந்தால் அது தொடர்பாக சஹாபிகள் அனைவரிடையேயும் சலசலப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். ஏனென்றால் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நூற்றுக்கணக்கான மக்களுக்குத் திருக்குர்ஆனைக் கற்றுக் கொடுத்தும் மனனம் செய்வித்தும் வந்தார்கள். இவ்வாறாக வரலாற்றில் இருந்து ஒரு போரின் போது 70 காரிகள் ஷஹீதானார்கள் என்று நிரூபணம் ஆகி உள்ளது. ஒரு போரில் ஷஹீதான அவர்களுடைய எண்ணிக்கை இந்த அளவுக்கு இருக்கையில் இதிலிருந்து அச்சமயம் முஸ்லிம்களில் எந்த அளவுக்கு காரிகள் இருந்திருப்பார்கள் என்பதை கணிக்க முடியும். இந்த நூற்றுக்கணக்கான ஹா.ஃபிழ்கள் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எவர்களுக்கு இறை வசனங்கள் இறங்கியவுடன் மனனம் செய்வித்தார்களோ அந்த ஐந்து ஹா.ஃபிழ்களைத் தவிர உள்ளவர்கள் ஆவர். இவ்வைந்து ஹா.ஃபிழ்களும் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். மேலும் அவர்கள் தவிர அவர்களது நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கும் திருக்குர்ஆனின் வசனங்கள் மனனத்தில் இருந்தன.

ஆக ஒருவேளை சில வசனங்கள் திடீரென்று சிந்தனையிலிருந்து அழிந்து விட்டனவென்றால் முஸ்லிம்களிடத்தில் பெரும் சலசலப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். மேலும் இவ்வகையிலான பல அறிவிப்புகள் இருந்திருக்க வேண்டும். மேலும் பெரும் மகத்துவமிக்க சஹாபாக்கள் உதாரணமாக ஹஸ்ரத் அபூபக்ர், உமர், அலீ ரலியல்லாஹு அன்ஹும் போன்றோர் இந்த அதிகாரம் எங்களுக்கு நினைவில் இருந்தது. ஆனால் பிறகு திடீரென்று மறந்து விட்டது என்று கூறியிருப்பர். இதேபோன்று ஒருவேளை மக்களுக்கு ஏதேனும் வசனம் மறந்து விட்டது என்றால் அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோரிடம் வந்து கேட்பர். அவர்கள் எங்களுக்கும் மறந்து விட்டது என்று கூறி இருப்பார். பிறகு அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம் கேட்டிருப்பர். அவர் எனக்கும் மறந்து விட்டது என்று கூறியிருப்பார். பிறகு அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் கேட்டிருப்பர் அவர் எனக்கும் மறந்து விட்டது என்று கூறி இருப்பார். பிறகு அவர்கள் அனைவரும் ஒன்றாக ரஸூலுல்-லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் வந்து அன்னாரிடம் அதனைப் பற்றி கேட்டிருந்தால் அன்னார் அதனை வானவர்கள் எடுத்துச் சென்று விட்டனர். எனக்கும் நினைவில் இல்லை என்று கூறியிருப்பார்கள். இவ்வாறாக ஒரு பெரும் சலசலப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால் இரண்டு மனிதர்களுக்கு மட்டுமே அதுவும் அவர்களது தந்தையின் பெயரும் தெரியவில்லை, ஓர் அதிகாரம் மறந்து விட்டது என்று கூறப்படுகிறது. மேலும் பிறகு அவர்கள் இரவில் ஒன்றாகவே உறங்கினர். மேலும் பிறகு அவர்கள் ஒன்றாகவே தொழுகைக்காக எழுந்தார்கள். மேலும் பிறகு அந்த வசனங்கள் ஒன்றாகவே அவர்களுக்கு மறந்து விட்டது. மேலும் காலையில் பிறகு அவர்கள் ஒன்றாகவே ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கேட்பதற்காகச் சென்றார்கள். மேலும் பிறகு இந்த மறதி எந்த அளவுக்கு அதிகரித்தது என்றால் இந்த அறிவிப்புகளின் அறிவிப்பாளர்களுடைய பெயர்களும் மக்களுக்கு மறந்து விட்டன. மேலும் அவர்கள் இருவரும் யார் என்பதும் நினைவில் இல்லை என்பது வினோதமான நகைச்சுவை ஆகும். மறதியின் இந்த நகைச்சுவையை ஒரு முட்டாள் தான் ஏற்றுக் கொள்ள முடியும். அறிவுள்ள மனிதனால் இதனை முற்றிலும் ஏற்றுக் கொள்ளவே முடியாது.

எந்த வசனங்கள் தொடர்பாக அவற்றின் வார்த்தைகள் நீக்கப்பட்டு விட்டதாகவும் பொருள் நிலை பெற்றிருப்பதாகவும் கூறப்படுகின்றதோ அவற்றைப் பற்றி கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயம் யாதெனில் கட்டளை நிலைபெற்றிருக்கின்றபோது அவற்றின் வார்த்தைகள் ஏன் பொய்யாக்கப்பட்டன? இவ்விஷயமும் எந்த ஒரு நேரிய அறிவு படைத்தவரும் ஏற்றுக் கொள்ளத் தயாராக முடியாத ஒன்றாகும். அவர்கள் இதற்கு சான்றாக, திருக்குர்ஆனில் முன்னர் கல்லெறிந்து கொல்லும் கட்டளை இருந்தது. ஆனால் தற்போது இல்லை என்று கூறுகின்றனர். ஆனால் கல் எறிந்து கொல்லும் கட்டளை நீக்கப்படவில்லை. மேலும் திருக்குர்ஆனில் முன்னர் الشيخ والشيخة إذا زنيا فارجموهما ஆணும் வயதான பெண்ணும் விபச்சாரம் செய்தால் அவர்கள் இருவரையும் கல்லடித்து கொல்ல வேண்டும் என்ற வசனம் இருந்தது. ஆனால் இந்தக் கட்டளை நிலைபெற்றிருக்கின்றது; ஆனால் வார்த்தைகள் நீக்கப்பட்டு விட்டன என்றால் இதனால் எந்தப் பலன் ஏற்பட்டுள்ளது? கட்டளை நிலை பெற்றிருக்கின்றது என்றால், பிறகு வார்த்தைகள் ஏன் மறைய வேண்டும்?

அதற்கும் மேலாக மற்றும் ஒரு வசனத்தில் மனிதன் மிகப்பெரிய பேராசைக்காரன் ஆவான் என்ற நகைச்சுவையாகும். இது தொடர்பாகவும் அவர்கள் அது நீக்கப்பட்டு விட்டது என்று கூறுகிறார்கள். இத்தனைக்கும் அது ஒரு சம்பவமாகும் கட்டளை அல்ல. மேலும் இந்த சம்பவத்தை பற்றி அது நீக்கப்படுவதில்லை என்பதில் அனைத்து விரிவுரையாளர்களும் ஒன்றுபட்ட கருத்துடையவர்களாக இருக்கிறார்கள். எனவே த.்.ப்ஸீர் இப்னு கஸீரில் اما الاخبار فلا يكون فيها ناسخ ولا منسوخ அதாவது செய்திகள் மற்றும் சம்பவங்களில் எவ்வித நீக்கமும் ஏற்படுவதில்லை என்று எழுதப்பட்டுள்ளது. ஆக சம்பவம் பற்றிய வசனம் நீக்கப்படுவதற்கு என்ன பொருள்? இதிலிருந்து சம்பவம் தொடர்பாக இறைவனுக்குத் தவறு ஏற்பட்டு விட்டது என்றே பொருளாகும். கட்டளை நீக்கப்படுவதற்கு ஏதேனும் காரணம் இருக்கலாம். ஆனால் கட்டளை இல்லாத மற்ற விஷயங்கள் நீக்கப்படாது. பிறகு அது ஏன் நீக்கப்பட்டுவிட்டது?

எவ்வாறாகிலும் இந்த விஷயங்கள் தன்னுள் எந்த அளவுக்கு நகைப்புக்குரியவையாக இருக்கின்றன என்றால் எந்த மனிதனும் அவற்றை சரியானதாக ஏற்றுக் கொள்ள முடியாது. மேலும் பிறகு நீக்கப்பட்டதாக அவர்கள் எடுத்துக் கூறுகின்ற வசனங்களின் வார்த்தைகளும் வினோதமானவை ஆகும். உதாரணமாக الشيخ والشيخة إذا زنيا فارجموهما ஷைஹ் என்பதற்கு மூன்று பொருள்கள் இருக்க முடியும். முதலாவது ஆலிம் அல்லது சமுதாயத்தின் தலைவர் மேலும் சர்தார் ஆகியவை. இரண்டாவது, திருமணம் ஆன ஆண். ஏனென்றால் அரபி மொழியில் ஷைகுல் மர்அதி என்று பெண்ணின் கணவரை அழைப்பார்கள். மூன்றாவது முதியவர் மற்றும் பலவீனமான மனிதன். இந்த பொருள்களின் அடிப்படையில் இந்தச் சொற்றொடருக்கு இவ்வாறு பொருள் கொள்ளலாம். ஒருவேளை ஏதேனும் பெரிய ஆலிம் அல்லது கண்ணியத்திற்குரிய மனிதன் விபச்சாரம் செய்தால் அவனைக் கல்லால் அடித்துக் கொல்லுங்கள். சிறிய மனிதன் செய்தால் அவ்வாறு செய்யாதீர்கள் என்று பொருள் கொள்ளலாம். இரண்டாவது பொருள், ஒருவேளை கணவன் அல்லது மனைவி விபச்சாரம் செய்தால் அவர்களைக் கல்லால் அடித்துக் கொல்லுங்கள். ஏனென்றால் ஷைக் மற்றும்



ஷைகது என்பதற்கு இவ்விடத்தில் கணவன் மனைவியையும் பொருள் கொள்ளலாம். இவ்விதத்தில் கணவன் மனைவியும் தங்களுக்குள் விபச்சாரம் செய்கின்றார்கள் என்று பொருள் கொடுக்க வேண்டும். மூன்றாவது, ஒன்று கூட ஆற்றல் அற்ற முதிய ஆணும் புதிய பெண்ணும் விபச்சாரம் செய்தால் அவர்களைக் கல்லால் அடித்துக் கொல்லுங்கள் என்று பொருள். இவ்வாறாக மூன்று இடங்களிலும் சாத்தியமற்ற கட்டளை என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டி வரும். அதாவது ஒன்று கூட ஆற்றல் அற்ற ஆணும் பெண்ணும் விபச்சாரம் செய்தால் அல்லது கணவன் மனைவி விபச்சாரம் செய்தால் அவர்களைக் கல்லால் அடித்துக் கொல்லுங்கள். அல்லது பெரிய மனிதன் விபச்சாரம் செய்தால் அவனைக் கல்லால் அடித்துக் கொல்லுங்கள். சிறிய மனிதன் செய்தால் விட்டு விடுங்கள். ஆக எத்திசையில் பார்த்தாலும் இதனை எந்த ஒரு மனிதனும் திருக்குர்ஆனுடைய வசனமாக ஏற்றுக் கொள்ளத் தயாராக முடியாது.

பிறகு இங்கு வசனங்கள் நீக்கப்படுதல் பற்றிய குறிப்பின் சந்தர்ப்பம்தான் என்ன? இங்கோ யூதர்களின் வேதத்தைப் பற்றி கூறப்பட்டு வருகின்றது. மேலும் அவர்கள் நாங்கள் எங்களது வேதத்தைதான் ஏற்போம் என்று கூறுகிறார்கள் என்று கூறப்பட்டுள்ளது. எனவே ஒருவேளை இங்கு நீக்கப்படுதல் பற்றிய குறிப்பாகவே ஏற்றுக் கொள்வதாயின் இதற்கு இங்கு முந்தைய



வேதங்களின் நீக்கப்படுதல் பற்றிய குறிப்பு என்று பொருள்படும். அதாவது தவ்ராத் போன்றவை. ஆனால் விரிவுரையாளர்கள் இங்கு திருக்குர்ஆனின் நீக்கம் பற்றி கூறுகிறார்கள். இத்தனைக்கும் இவ்விஷயம் முந்தைய விஷயங்களுடன் ஒரு தொடர்பையும் கொண்டிருக்க -வில்லை. முதல் பகுதியில் யூதர்கள் நாங்கள் இறைவனுடைய குறிப்பான அருள்களுக்கு வாரிசுகள் ஆவோம். நாங்கள் எங்களது நபிமார்களின் வேதத்தை ஏற்றுக் கொள்வோம் மற்றவர்களது வேதத்தை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என்று கூறுகிறார்கள் என்று கூறப்பட்டுள்ளது. இதற்கு இறைவன் அவர்களுக்கு முன் எனது குர்ஆனும் நீக்கப்பட்டு விடுகின்றது. மறக்கப்பட்டு விடுகின்றது. எனவே நீங்கள் இதனை ஏற்றுக் கொள்ளுங்கள் என்றால் ஆதாரத்தை எடுத்து வைப்பான்?

உண்மை யாதெனில் مَانَنۡسَخۡ مِنۡ اٰيَةٍ اَوۡ نُنۡسِهَا نَاۡتِ بِخَيۡرٍ مِّنۡهَاۤ اَوۡ مِثۡلِهَا என்ற வசனத்தில் திருக்குர்ஆனின் வசனங்கள் நீக்கப்பட்டதாக எங்கும் குறிப்பு இல்லை. மாறாக கட்டுரையின் வரிசை கிரமத்திலிருந்து முந்தைய வசனங்களில் யூதர்கள் தொடர்பாக அவர்கள் உம் மீது எவ்வகையான நன்மையும் இறங்கக் கூடாது என்று அவர்கள் விரும்பவில்லை என்ற இந்தக் குறிப்பு குறிப்பிடப்பட்டுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது. மேலும் மிகப் பெரிய நன்மை இறை இல்ஹாம் ஆகும். எனவே இந்த வசனத்தை முந்தைய வசனங்களுடன் தொடர்புடையதாகவே குறிப்பிட முடியும். எந்த ஒரு கட்டுரைகளும் தொடர்பில்லாமல் குறிப்பிடப்படுவது என்பது எவ்வகையிலும் ஆகுமானதாக இருக்க முடியாது. மேலும் யூதர்கள் உங்கள் மீது எவ்வித நன்மையும் இறங்குவதை விரும்புவதில்லை என்பதே அந்த விஷயமாகும். ஆனால் அல்லாஹுதஆலா யார் மீது நாடுகிறானோ அருள் செய்கின்றான். ஆக அவள் உம் மீது நன்மையை இறக்கி இருக்கின்றான். அதாவது திருக்குர்ஆனை. ஆனால் முந்தைய வேதங்கள் இருக்கும்போது புதிய வேதத்தின் அவசியம் என்ன நேர்ந்தது என்ற கேள்வி எழலாம் எனும்போது அதற்கான பதிலை இவ்வாறு வழங்கி இருக்கின்றான். இந்த வேதங்களின் சில பகுதிகள் நீக்கப்படுவதற்கு உகந்ததாக இருந்தன. மேலும் கடந்த காலத்தில் இருந்து மக்களுக்கு மறந்து விட்ட விஷயங்களும் இருந்தன. மேலும் மெது மெதுவாக இறை வேதத்தில் இருந்து அழிந்துவிட்டிருந்தன. அவற்றை மீண்டும் எடுத்துரைப்பது அவசியமானதாக இருந்தது. எனவே ஒரு பகுதியை நாம் நீக்கப்பட்டதாக ஆக்கி விட்டோம். மேலும் அதை விடச் சிறந்த போதனையை இந்த வேதத்தில் எடுத்துக் கூறியுள்ளோம். மேலும் மறந்து விட்டிருந்த போதனையை மீண்டும் அதேபோன்று எடுத்துரைத்து விட்டோம். மேலும் வேதத்தையுடையவர்கள் இதன் மீது ஆட்சேபனை செய்ய முடியாது. ஏனென்றால் அவர்களுடைய வேதங்களிலேயே புதிய ஷரீஅத்தின் செய்தி இடம் பெற்றிருக்கின்றது. எரேமியா அதிகாரம் 31, வசனம் 31 -ல் எழுதப்பட்டுள்ளது.

இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களோடே பண்ணின உடன்படிக்கையின் படி அல்ல.

அதேபோன்று எபிரேயர் பாகம் 8, வசனம் 8 -ல் எழுதப்பட்டுள்ளது. அதேபோன்று இதோ, கர்த்தர் சொல்லுகிறதென்னவெனில்: இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் நான் புது உடன்படிக்கையை ஏற்படுத்துங்காலம் வருகிறது. அவர்களுடைய பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து கொண்டு வரும்படிக்கு நான் அவர்களுடைய கையைப் பிடித்த நாளிலே அவர்களோடு பண்ணின உடன்படிக்கையைப் போல இது இருப்பதில்லை அந்த உடன்படிக்கையிலே அவர்கள் நிலைநிற்கவில்லையே, நானும் அவர்களைப் புறக்கணித்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இந்த பொருள்தான் முந்தைய வசனத்திற்கு ஏற்பவும் திருக்குர்ஆனின் கூற்றுகளுக்கு ஏற்பவும் இருக்கின்றது. இல்லையென்றால் மேலே கூறப்பட்டுள்ள சில விரிவுரையாளர்களின் விளக்கங்கள் ஒருபோதும் சரியானது இல்லை. திருக்குர்ஆனின் வார்த்தைகளும் அதற்கு ஏற்ப இல்லை. மேலும் முந்தைய வசனங்களும் இதற்கு சாட்சி கூறவில்லை. மேலும் பகுத்தறிவும் அதனை ஆமோதிப்பதில்லை. மேலும் அவர்களது கூற்றை உறுதிப்படுத்துகின்ற விதமாக ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது எந்த ஒரு கூற்றும் அறிவிக்கப்படவில்லை.

(தொடரும்....)

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

نَحْمَدُهٗ وَنُصَلِّی عَلٰی رَسُوْلِهِ الْکَرِیْمِ وَعَلٰی عَبْدِهِ الْمَسِیْحِ الْمَوْعُوْدِ

خدا کے فضل اور رحم کے ساتھ

ھوالنّاصر

وَاجْعَلْ لِّي مِنْ لَّدُنْكَ سُلْطَانًا نَّصِيْرًا

اِنَّا فَتَحْنَا لَكَ فَتْحًا مُّبِيْنًا

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ


امام جماعت احمدیہ

# ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் தூதுச்செய்தி

இஸ்லாமாபாத் யூ.கே
MA 22.08.2022

அன்பிற்குரிய இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா உறுப்பினர்களுக்கு

اَلسَّلَامُ عَلَيْكُمْ وَرَحْمَةُ اللّٰهِ وَ بَرَكَاتُهٗ



இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவுக்குத் தனது ஆண்டு இஜ்திமாவை நடத்துவதற்கு நல்வாய்ப்பு கிடைக்கிறது என்பதை அறிந்து நான் மிக்க மகிழ்ச்சியடைந்தேன். இந்த சந்தர்ப்பத்தில், தூதுச் செய்தி அனுப்புமாறு என்னிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அல்லாஹ் இதை எல்லா வகையிலும் வெற்றிக்குரியதாகவும் அருளுக்குரியதாகவும் ஆக்குவானாக, குத்தாம் மற்றும் அத்ஃபாலிடம் இதன் நல்ல விளைவுகளை வெளிப்படுத்துவானாக என்று நான் துஆ செய்கிறேன். ஆமீன்!

நினைவில் கொள்ளுங்கள்! மார்க்க நோக்கத்திற்காக மட்டும் ஒரு சிறப்பான சூழலில் ஒன்றுகூடுவது, அல்லாஹ்வை நினைவு கூருவதற்காக ஒன்றுகூடுவது மற்றும் அவனது திருப்தியைப் பெறுவதற்காக ஒன்றுகூடுவது, நிச்சயமாக அல்லாஹ்வின் அருட்களை ஈர்க்கிறது. இத்தகைய சந்தர்ப்பங்களில் கலந்து கொள்ளக் கூடியவர்கள், நீங்கள் செவிமடுக்கும் நல்ல விஷயங்கள் படி செயல்படுங்கள். நன்மை மற்றும் இறையச்சத்தை உங்களது அடையாளமாக்கிக் கொள்ளுங்கள். உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை கொடுங்கள். கிலாஃபத்துடன் இணைந்திருப்பதிலும் விசுவாசத்திலும் மேலும் முன்னேறுங்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஜமாஅத்திற்கு மீண்டும் மீண்டும் இறையச்சத்திற்கான போதனையை வழங்கியுள்ளார்கள். அன்னார் நமக்கு இறைவனின் திருப்தியைப் பெறுவதற்காக இறையச்சத்தின் வழியில் செல்லுமாறு அறிவுறுத்திய வண்ணம் கூறுகிறார்கள்: 'முந்தைய அனைத்துத் தூய வேதங்களின் சுருக்கம் இறையச்சம் ஆகும்.' இது தொடர்பாக அன்னார் தமது ஓர் இறையறிவிப்பைப் பற்றிக் குறிப்பிட்டவாறு கூறுகிறார்கள்: "இறைவன் புறமிருந்து பலமுறை இவ்வாறு இல்ஹாம் வந்துள்ளது: நீங்கள் இறையச்சம் உடையவர்களாக ஆகிவிட்டால், இறையச்சத்தின் நுணுக்கமான வழிகளில் சென்றால், இறைவன் உங்களுடன் இருப்பான்."

அன்னார் கூறுகிறார்கள்: "நமது ஜமாஅத் உண்மையான இறையச்சம் மற்றும் தூய்மையை மேற்கொள்வதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று எனது உள்ளத்தில் பெரும் வேதனை ஏற்படுகிறது. "பிறகு கூறுகிறார்கள்: "நான் எந்த அளவு துஆ செய்கிறேன் என்றால், துஆ செய்து செய்து பலவீனம் மேலோங்கி விடுகிறது. சில வேளை, மயக்கம் அடையும் அளவு, உயிரே போகும் அளவு நிலைமை சென்று விடுகிறது."

அன்னார் கூறுகிறார்கள்: "ஜமாஅத் இறைவனின் பார்வையில் இறையச்சம் உடையதாக ஆகி விடாத வரை, இறைவனின் உதவி அதற்குக் கிடைக்கப் பெற முடியாது."

அன்னார் கூறுகிறார்கள்: "அனைத்து முந்தைய தூய வேதங்கள் மற்றும் தவ்ராத், இஞ்சீல் ஆகியவற்றின் போதனைகளின் சுருக்கம் இறையச்சம் ஆகும். திருக்குர்ஆன் ஒரே சொல்லில் (அதாவது, இறையச்சம் எனும் சொல்லில்) இறைவனின் மகத்தான விருப்பம் மற்றும் திருப்தியை வெளிப்படுத்தி விட்டது."

அன்னார் கூறுகிறார்கள்: "நான் எனது ஜமாஅத்தாரில், உண்மையான இறையச்சம் உடையவர்கள், உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை அளிப்பவர்கள் மற்றும் இறைவனுக்காகத் தொடர்புகளைத் துண்டித்துக் கொள்பவர்களை(ப் பிரித்து)த் தனியாக்க வேண்டும் சில மார்க்கப் பணிகளை அவர்களிடம் ஒப்படைத்து விட வேண்டும் என்ற கவலையிலும் மூழ்கியுள்ளேன். பிறகு, நான் உலகத்தின் சுக துக்கங்களில் மூழ்கிக் கிடப்பவர்களையும், அல்லும் பகலும் உலக

*(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்...)*

# உன்னையே நீ விற்று விடு!


ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஓர் இளைஞன் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களிடம் வந்து 'விலங்குகளின் மொழியை நான் அறிந்து கொண்டால் அவற்றிலிருந்து என்னால் படிப்பினைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்' என்று கூறினான்.

ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் அவனிடம் 'அறிந்து கொள்ளும் ஆற்றலையும் விழிப்புணர்வையும் இறையருள் இன்றி பெற்றுக் கொள்ள இயலாது. எனவே, இந்த எண்ணத்தைக் கைவிட்டு விடு. ஏனெனில் இதில் அபாயம் உள்ளது' என்று கூறினார்கள். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் தடை செய்த பின்னரும் அந்த இளைஞன் விட்டபாடில்லை. அவனது ஆர்வம் இவ்விஷயத்தில் மேலும் அதிகமாயிற்று. அவன் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களிடம் தனது விருப்பத்தை வெளிப்படுத்திக் கொண்டேயிருந்தான்.

ஷைத்தான் அந்த இளைஞனை ஏமாற்றி விட்டான் என்பதை ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் அறிந்து கொண்டார்கள். விலங்குகளின் மொழிகளை அவனுக்கு நான் கற்றுக் கொடுத்தால் அது அவனுக்கு இழப்பையே ஏற்படுத்தும். கற்றுக் கொடுக்கா விட்டால் அவனிடம் சந்தேகங்கள் தோன்றி விடும்.

இறைவன் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களிடம் அந்த இளைஞனுக்கு விலங்குகளின் மொழிகளைக் கற்றுக் கொடுக்குமாறு கூறினான். எனவே ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் அவனுக்கு நாய்கள் மற்றும் சேவல்களின் மொழிகளைக் கற்றுக் கொடுத்தார்கள்.



மறுநாள் அவன் தனது நாய் மற்றும் சேவலின் குரல்களைக் கூர்ந்து கவனித்தான்.

வேலைக்காரி உணவு மேஜையின் மீதிருந்த விரிப்பை தூசி தட்டியபோது அதில் எஞ்சியிருந்த முந்தைய நாள் இரவின் அப்பத்துணுக்குகள் தரையில் விழுந்தன. சேவல் அவற்றை உடனே கொத்தித் தின்றது.

நாய் சேவலிடம் 'நீ என்னுடன் நேர்மையற்ற முறையில் நடந்து கொள்கிறாய். நீ தானியங்கள் போன்றவற்றை உண்கிறாய். என்னால் அவற்றை உண்ண முடியாது' என்றது.

அதற்கு சேவல், 'கவலைப்படாதே, இந்த எஞ்சிய உணவுப் பருக்கைகளை விடச் சிறந்த உணவு உனக்கு கிடைக்கப்போகிறது. நமது எஜமானின் குதிரை சாகப் போகிறது. அதன் மாமிசத்தை நாய்களைத் தவிர வேறு எவரும் உண்ண மாட்டார்கள்' என்றது. இதைக் கேட்ட இளைஞன் உடனே தனது குதிரையை விற்று விட்டான். அதன் மூலம் தன்னை இழப்பிலிருந்து காத்துக் கொண்டான்.

மறுநாளும் இவ்வாறே நடந்தது. சேவல் உணவுப் பருக்கைகளை உண்டது. அதே உரையாடல் இரண்டிற்கும் இடையில் நடைபெற்றது. 'குதிரை விற்கப்பட்டு விட்டதால் அது வேறோரு இடத்தில் மரணித்தது. எனினும் நீ கவலைப்படாதே. எஜமானின் ஒட்டகம் நாளை இறந்து விடும். உனக்குப் பெரிய விருந்து காத்திருக்கிறது' எனறு சேவல் கூறியது. இதைக் கேட்ட இளைஞன் உடனே ஒட்டகத்தை விற்று விட்டான்.

மூன்றாம் நாள் அதே நிகழ்ச்சி நடைபெற்றது. நாய் மீண்டும் சேவலிடம் அங்கலாய்த்துக் கொண்டது. அப்போது சேவல், 'ஒட்டகமும் விற்கப்பட்டது. அது வேறொரு இடத்தில் மரணித்தது. இருப்பினும் கவலைப்படத் தேவையில்லை. ஏனெனில் எஜமானின் அடிமை நாளை மரணித்து விடுவான். அதையொட்டி அவனது உறவினர்களுக்கும் நாய்களுக்கும் நல்ல உணவு கிடைக்கும்.'

அந்த இளைஞன் தனது அடிமையையும் விற்று விட்டான். நான்காவது நாள் சேவல் மிகவும் வெட்கப்பட்டவாறு நாயிடம் கூறியது. 'நான் கூறியதெல்லாம் பொய் என்று மட்டும் நினைத்து விடாதே. நான் உன்னிடம் கூறிய செய்திகள் எல்லாம் சரியானவையே. நாங்கள் நம்பிக்கைக்குரியவர்களும் காலத்தின் பாதுகாவலர்களும் ஆவோம். கூண்டில் அடைக்கப்பட்டாலும் குறித்த நேரத்தில் தொழுகைகளுக்கு அழைப்பு விடுத்து விடுவோம். நடந்தவையெல்லாம் வரலாறு ஆகும். அவரே இப்போது இறந்து விடுவார். உனக்கு கொண்டாட்டம்தான். அவர் தனது குதிரை, ஒட்டகம் மற்றும் அடிமையைப் பற்றி கவலைப்படாமல் இருந்திருந்தால் இப்போது தன்னைக் காப்பாற்றி இருப்பார். அவர் தனது செல்வத்தின் மீது அக்கறைக் கொண்டார். ஆனால் தனது ஆன்மாவின் மீது அக்கறை கொள்ள -வில்லை. ஆன்மீக முயற்சி மற்றும் பயிற்சி மூலமாக தர்வேஷ்கள் தனது ஆன்மீக வாழ்வை மேம்படுத்திக் கொள்கின்றனர்.'

சேவல் இந்தக் கருத்தை நேர்த்தியான முறையில் நாயிடம் எடுத்துக் கூறியது. எவ்வாறு மனிதர்கள் தம்மை தீமைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம் என்பதை விளக்கியது. இப்போது இந்த மனிதன் தனது ஆன்மாவைப் பொருட்படுத்தாததன் காரணமாக மரணிக்கப் போகிறான்.

வீட்டின் எஜமான் இதனைக் கேட்டு மிகவும் பயந்து போய் நடுங்கியவாறே ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களிடம் ஓடிச் சென்றான். அப்போது ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் அவன் தன்னையே விற்று விடுவதன் மூலம் அவன் காப்பாற்றப்படலாம் என்று அவனிடம் கூறினார்கள். 'நீ உனக்கு நேரவிருந்த இழப்புகளை எல்லாம் பிறருக்கு மாற்றி விட்டு உனது செல்வத்தைக் காப்பாற்றிக் கொண்டாய். இப்போது நீ என்ன செய்யப் போகிறாய்? இந்த தருணத்தில் உன்னை நீ மரணத்திலிருந்து காப்பாற்ற முடியாது. உனது ஈமானை நீ சரிசெய்து கொள். நீ நம்பிக்கை கொண்டவனாய் மரணித்தால், நீ மரணிக்கமாட்டாய்; உயிருடன் இருப்பாய்.'

அந்த இளைஞன் உண்மையான நம்பிக்கையாளராக தன்னை மாற்றிக் கொண்டு ஆன்மீக மரணத்திலிருந்து தன்னைக் காத்துக் கொண்டான்.

(ஹயாத்தே அஹ்மது, தொகுதி 1, பாகம் 2, பக்கம் 232-234, 2013 பதிப்பு)

# சிறுவர் பகுதி

# மார்க்க அறிவுப் புத்தகம்




தமிழாக்கம்: M.M. இப்ராஹீம்

## 1. இஸ்லாம்

26. 'முஅத்தின்' என்பவர் யார்?

தொழுகைக்காக அழைப்பு (அதான்) விடுப்பவரை 'முஅத்தின்' என்று கூறுகிறோம்.

27. 'அதான்' என்பது என்ன?

தொழுகைக்கான அழைப்பை 'அதான்' என்கிறோம். அதில் வரும் சொற்றொடர்கள் பின்வருமாறு:

அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர்

அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர்

அஷ்ஹது அன்லாயிலாஹா இல்லல்லாஹ்

அஷ்ஹது அன்லாயிலாஹா இல்லல்லாஹ்

அஷ்ஹதுஅன்னமுஹம்மதர் ரஸூலுல்லாஹ்

அஷ்ஹது அன்னமுஹம்மதர் ரஸூலுல்லாஹ்

ஹையஅலஸ் ஸலாஹ் ஹையஅலஸ் ஸலாஹ்

ஹையஅலல் ∴பலாஹ் ஹையஅலல் ∴பலாஹ்

அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர்

லாயிலாஹ இல்லல்லாஹ்

மொழியாக்கம்:

அல்லாஹ் மிகப் பெரியவன். அல்லாஹ் மிகப் பெரியவன்

அல்லாஹ் மிகப் பெரியவன். அல்லாஹ் மிகப் பெரியவன்

வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்று சாட்சி கூறுகிறேன்.

வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்று சாட்சி கூறுகிறேன்.

முஹம்மது அல்லாஹ்வின் தூதர் என்று சாட்சி கூறுகிறேன்.

முஹம்மது அல்லாஹ்வின் தூதர் என்று சாட்சி கூறுகிறேன்.

தொழுகைக்கு வாருங்கள். தொழுகைக்கு வாருங்கள்.

வெற்றி பெற வாருங்கள். வெற்றி பெற வாருங்கள்.

அல்லாஹ் மிகப்பெரியவன் அல்லாஹ் மிகப்பெரியவன்

வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை.




28. ∴பஜ்ர்' தொழுகையின்போது அதானுடன் எந்தச் சொற்றொடர் சேர்த்துக் கூறப்படும்?

முஅத்தின் 'ஹையஅலல் ∴பலாஹ்' என்று கூறி முடித்த பின்

அஸ்ஸலாத்து ஹைரும் மினன்னவ்ம் அஸ்ஸலாத்து ஹைரும் மினன்னவ்ம் என்ற சொற்றொடரையும் சேர்த்து கூறுவார். இதன் பொருள் தூக்கத்தை விடத் தொழுகை சிறந்தது என்பதாகும்.

29. ஒளு செய்யும் முறையை விவரி:

ஒளு செய்யும் முறைபின்வருமாறு:

1) மணிக்கட்டு வரை முதலில் வலது மற்றும் இடது கைகளை மூன்று முறை கழுவ வேண்டும்.
2) மூன்று முறை வாய் கொப்பளித்து சுத்தம் செய்ய வேண்டும்.
3) மூன்று முறை நாசித் துவாரங்களைச் சுத்தம் செய்ய வேண்டும்.
4) மூன்று முறை முகம் கழுவ வேண்டும்.
5) இரண்டு கைகளையும் முதலில் வலது பின் இடது முழங்கை வரை மூன்று முறை கழுவ வேண்டும்.
6) ஈரமான கைகளால் தலை முடியிலிருந்து கழுத்து வரை கீழாகத் தடவ வேண்டும். பின்னர் இரு காதுகளையும் உட்புறம் தடவி சுத்தம் செய்ய வேண்டும்.
7) இரண்டு கால்களையும் கணுக்கால் வரை (முதலில் வலது பின் இடது) மூன்று முறை கழுவி சுத்தம் செய்ய வேண்டும்.

30. ஒளு செய்ய தண்ணீர் கிடைக்கவில்லை யெனில் என்ன செய்ய வேண்டும்?

"தயம்மும்" செய்ய வேண்டும்.

31. 'தயம்மும்' எவ்வாறு செய்ய வேண்டும்?

சுத்தமான தூசு இருக்குமிடத்தில் இரு கைகளையும் தேய்த்து விட்டு பின் அந்தக் கைகளால் முகத்தையும் முழங்கைகளையும் குறிப்பிட்டபடி தேய்த்துக் கொள்ள வேண்டும்.

32. ஒளு எப்போது புதிதாகச் செய்ய வேண்டும்?

ஒருமுறை ஒளு செய்த பின்பு அந்த ஒளு முறியாத வரை தொழுகையை நிறைவேற்றலாம். ஒளு முறிந்து விட்டால் மீண்டும் ஒளு செய்ய வேண்டும். பின்வரும் காரணங்களால் ஒளு முறிகிறது:

1) இயற்கையின் அழைப்புக்கு பதிலளித்தல், சிறுநீர் கழித்தல், காற்று வெளியாதல்

2) முதுகுத் தாங்கலுடன் தூங்குதல், கண் அயர்தல்

3) மூர்ச்சையாதல்.

4) காயம் படுதல்

5) வாந்தி எடுத்தல்

6) அதிக இரத்தப்போக்கு

33. முஸ்லிம்கள் எந்தத் திசையை நோக்கி முகம் திருப்பி தொழுகின்றனர்?

மக்காவில் இருக்கும் "கஅபா"வின் திசையை நோக்கித் தொழுகின்றனர்.

34. ரக்அத் என்பது என்ன?

தொழுகையில் நிலையிலிருந்து ஸுஜூது வரை ஒருமுறை செய்யும் செயல்களை ஒரு ரக்அத் என்கிறோம். தொழுகைகள் ரக்அத்துகளினால் ஆனவையாகும்.

35. தினமும் ஐவேளைத் தொழுகைகளின் ரக்அத்துக் -களைக் கூறுக:

ஃபஜ்ர் தொழுகை: முன் சுன்னத் 2 ரக்அத்துகள், ஃபர்ள் 2 ரக்அத்துகள்

ளுஹர் தொழுகை: முன் சுன்னத் 4 ரக்அத்துகள், ஃபர்ள் 4 ரக்அத்துகள். பின் சுன்னத் 2 ரக்அத்துகள்

(ஜுமுஆ தொழுகையில் முன் சுன்னத் 4 ரக்அத்துகள் அதன் பின் இமாம் குத்பா ஓதிய பின் ஃபர்ள் 2 ரக்அத்துகள். அதன் பின் பிந்திய சுன்னத் 2 ரக்அத்துகள்.

அஸ்ர் தொழுகை: ஃபர்ள் 4 ரக்அத்துகள்

மக்ரிப் தொழுகை: ஃபர்ள் 3 ரக்அத்துகள், பின் சுன்னத் 2 ரக்அத்துகள்

இஷா தொழுகை: ஃபர்ள் 4 ரக்அத்துகள், பின் சுன்னத் 2 ரக்அத்துகள்

அதன் பின் வித்ர் 3 ரக்அத்துகள்

36. ரமலான் மாதத்தில் நாமாகவே கூட்டாகத் தொழும் தொழுகை எது?

தராவீஹ் தொழுகை. தஹஜ்ஜுத் தொழ இயலாதவர்கள் இஷா தொழுகைக்குப் பின் இதனைத் தொழுகின்றனர்.

37. நோன்பு என்பது என்ன?

அல்லாஹ்வின் கட்டளையை ஏற்று அதிகாலை முதல் சூரிய அஸ்தமனம் முடியும் வரை உண்ணுதல், குடித்தல் ஆகியவற்றிலிருந்து முற்றிலும் விலகி இருத்தலே "நோன்பு" எனப்படும். மனிதனுக்கு நலம் பயக்கும் உயர் தகுதிகளைப் பெறுவதற்காக தீவிர பயிற்சி பெறும் காலமே ரமலான் மாதமாகும். தினமும் சில மணி நேரம் உண்ணுதல் குடித்தலிலிருந்து விலகி இருத்தல் ஒரு மனிதனிடம் சகிப்புத் தன்மையையும் தடுமாற்றமற்ற நிலைத்தன்மையையும் ஏற்படுத்துவதற்குரிய சிறந்த பயிற்சியாகும். மேலும் இந்தப் பயிற்சியின் மூலம் தேவையுடையோரின் (ஏழைகளின்) நிலையையும் நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

38. எவர்கள் நோன்பிலிருந்து விலக்களிக்கப் பெறுகிறார்கள்?

வயது வந்த ஒவ்வோர் ஆணும், பெண்ணும் நோன்பிருக்க வேண்டியது கடமையாகும். எனினும் ஒருவர் நோயாளிகவோ, பிரயாணத்திலோ இருந்தால் அந்த நோய் அல்லது பிரயாணத்தின் காலங்களில் நோன்பிருக்க வேண்டியதில்லை. அவர் அந்த நாட்களைக் கணக்கிட்டு பின்வரும் நாட்களில் அந்த நாட்களுக்கு நோன்பிருந்து பூர்த்தி செய்ய வேண்டும். நிரந்தரமாக இயலாமை அடைந்தவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோர் நோன்பிருப்பதிலிருந்து விலக்களிக்கப் பெறுகின்றனர். நோன்பிருப்பதைத் தாங்க முடியாத கஷ்டமாக உணரும் மனிதர் தேவையுடைய ஏழை மனிதருக்கு



நோன்பிருக்கும் காலத்திற்கு உணவு ஏற்பாடு செய்ய வசதி பெற்றவராயின் அவ்வாறு செய்து கொடுக்க வேண்டும்.

39. இஹ்த்திகா.்.ப் என்றால் என்ன?

ரமலான் மாதத்தின் பிந்திய பத்து நாட்களில் இரவும்,பகலும் மஸ்ஜிதில் தங்கிதமது முழு நேரத்தையும் இறை வணக்கத்திலும், இறைவனை நினைவு கூர்வதிலும் கழிப்பவரை முஅதகிப் என்கிறோம். இவ்வாறு மஸ்ஜிதில் தங்கிக் கழிக்கும் இந்தக் காலத்தை இஹ்த்திகா.்.ப் என்கிறோம்.

40.ஸக்காத் என்றால் என்ன?

பொருள் வசதி உடைய முஸ்லிம்கள் தமது தேவைக்கு அதிகமாக (ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல்) பணம், தங்கம், வெள்ளி, கால்நடைகள் போன்றவற்றை வருடம் முழுவதும் வைத்திருந்தால் அவற்றுக்காக அவற்றில் ஒரு பகுதியைத் தீர்வை (வரி)யாகச் செலுத்த வேண்டும். இந்தத் தீர்வையை ஸக்காத் என்கிறோம்.

41.பணம், தங்கம், வெள்ளி ஆகியவற்றின் மீது வருடத்திற்கு செலுத்த வேண்டிய ஸக்காத் சதவீதம் என்ன?

மொத்தத்தில் 2.5 சதவீதம் ஆகும்.

42. எந்தந்த நோக்கத்திற்காக ஸக்காத் பயன்படுத்தப் -படுகிறது என்பதில் சிலவற்றைக் கூறுக:

பின்வரும் பிரிவைச் சேர்ந்த மக்களுக்காக ஸக்காத்தைப் பயன்படுத்துகிறோம்:

1) ஏழைகளுக்காக

2. உழைத்துசம்பாதித்தும் தமது தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாதவர்களுக்காக

3. ஸக்காத்தை வசூலிப்பவர், கணக்கு பார்ப்பவர், மேலும் இப்பணியில்_ஈடுபட்டிருப்போர்

4. பண உதவி தேவைப்படும் புதிதாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட மக்களுக்காக

5. விடுதலைவாங்க இயலாத அடிமைகள், கைதிகளை விடுவிப்பதற்காக

6. வியாபாரத்தில் நஷ்டமடைந்தவர்கள், தமது கடன்களைத் திருப்பிச் செலுத்த இயலாத -வர்களுக்காக

7. தமது பிரயாணத்தைத் தொடர போதிய பணவசதி இல்லாதவர்கள் அல்லது கல்வியைத் தேடும் பணியில் ஈடுபட்டவர்களுக்காக

8) முஸ்லிம்களின் நலனை மேம்படுத்துவதற்காக.

(தொடரும்...)

## சொர்க்கமே நிரந்தரம்! நரகம் நிரந்தரமன்று!!

முஸ்லிம் உலகில் எல்லாப் பிரிவுகளும் சொர்க்கத்தைப் போன்றே நரகமும் நிரந்தரம் என்று நம்புகின்றனர்; ஆனால் அஹ்மதிய்யா முஸ்லிம் பிரிவு மட்டும் சொர்க்கம் நிலையானது என்றும், நரகம் நிலையற்றது என்றும் நம்புகிறது. இதற்குப் பல சான்றுகளைத் தரலாம். நான் திருக்குர்ஆனைப் படித்தபோது புதிதாக ஒரு சான்றைக் கண்டறிந்தேன். அதனை உங்கள் சிந்தனைக்குப் படைக்கிறேன்.

திருக்குர்ஆனில் عَدْنٍ 'அதன்' எனும் சொல் 11 இடங்களில் வருகிறது. 9/72, 13/24, 16/32, 18/32, 19/62, 20/77, 35/34, 38/51, 40/9, 61/13, 98/9. இச்சொல் جَنّٰتِ عَدْنٍ என்று அதாவது நிரந்தர சொர்க்கம் என்று எல்லா இடங்களிலும் வருகிறது. திருக்குர்ஆன் இதன் மூலம் சொர்க்கம் நிரந்தரம் என்று கூறுவதை விளங்கிக் கொள்கிறோம். இச்சொல் நரகத்துடன் எங்கும் வரவில்லை என்பதால், நரகம் நிரந்தரம் இல்லை என்று விளங்குகிறது. நரகம் நிரந்தரம் என்றால், 'அத்னி' என்னும் சொல் அதனுடன் ஏன் வரவில்லை? இறைவன் தன் இறுதித் திருமறையில் 'நிரந்தரம்' எனும் சொல்லைச் சொர்க்கத்துடன் மட்டும் கூறி, நரகத்துடன் பயன்படுத்தாமல் விட்டிருப்பதால் அது நிரந்தரமன்ற என்ற கருத்தைக் கூறியுள்ளான் என்று தெரிகிறது.

இவ்வாறே 'ஆதம் நபி' வாழ்ந்தது மறுமையில் உள்ள சொர்க்கம் என்றும் பின்னர் பூமிக்கு வந்தார் என்றும் இஸ்லாமிய உலகில் எல்லாப் பிரிவுகளும் நம்புகின்றன. ஆனால் அஹ்மதிய்யா முஸ்லிம் பிரிவு மட்டும் ஆதம் நபி படைக்கப்பட்டதும் வாழ்ந்ததும் பூமியிலுள்ள 'ஜன்னத்' என்று நம்புகின்றனர். இதற்குப் பல சான்றுகளைக் காட்டலாம். எனினும் நான் திருக்குர்ஆனைக் கற்றறிந்தபோது ஒரு புதிய சான்று ஒன்றைக் கண்டறிந்தேன். அதாவது திருக்குர்ஆனில் மறுமைச் சொர்க்கத்தில் வாழ்பவர்களைப் பற்றி, مَسٰكِنَ طَيِّبَةً அவர்கள் தூய இல்லங்களில் வாழ்வர் (9/72) என்று கூறியுள்ளான். தூய என்னும் அடைமொழியுடன் அவர்கள் வாழும் இல்லம் கூறப்பட்டுள்ளது. ஆனால் ஆதம் நபி வாழ்ந்த ஜன்னத்தைப் பற்றிக் கூறும்போது, 'ஆதமே! நீயும் உன் மனைவியும் இத்தோட்டத்தில் வாழுங்கள்' (2/36, 7/20) என்று கூறுகிறான். இங்கு 'தூய இல்லம்' பற்றி எதுவும் கூறப்படவில்லை.

இவ்வாறே மறுமையில் உள்ள சுவர்க்கத்தில் வாழ்பவர்களைப் பற்றி திருக்குர்ஆன் கூறும்போது, 'அவர்களுக்கு தூய துணைவர்கள் உண்டு' என்று (2/26, 3/16, 4/58) கூறுகிறது. அதாவது اَزْوَاجٌ مُّطَهَّرَةٌ என்று கூறுகிறது. இவ்வாறு ஆதம் நபியையும் அவரது துணையைப் பற்றியும் திருக்குர்ஆன் எங்கும் கூறவில்லை.

இவ்வாறு பூமியிலுள்ள ஜன்னத்தையும், மறுமை ஜன்னத்தைப் பற்றியும் வேறுபடுத்திக் காட்டியிருப்பதன் மூலம், ஆதம் நபி வாழ்ந்தது பூமியிலுள்ள தோட்டம் என்றும், மறுமை ஜன்னத்தில் அவர் படைக்கப்படவில்லை. அங்கிருந்து பூமிக்கு வரவில்லை என்றும் நாம் விளங்கிக் கொள்கிறோம்.

(A.P.Y. அப்துல் காதிர்)

லிக்கா மஅல் அரப் – அரபு மக்கள் உடனான சந்திப்பு (பிப்ரவரி 18, 1997)

கேள்வி மற்றும் பதில்

# இயேசு கிறிஸ்துவின் தாயார் மரியாள் மற்ற பெண்களைப் போன்ற ஒரு பெண்ணா?

## ஹஸ்ரத் நான்காவது கலீ.ஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் வழங்கிய பதில்

எல்லாவற்றுக்கும் முதலில் இம்ரானின் குடும்பத்தினரைச் சேர்ந்த அந்தப் பெண்மணி (மரியாளின் தாயார்) என்ன பிரார்த்தனை செய்தார் என்பதனை நாம் புரிந்து கொண்டு, அந்த பேர் சொல்லப்படாத அந்த பெண்மணி இறைவனிடம் செய்த அந்த பிரார்த்தனையில் உள்ள வார்த்தைகளையும் சொற்றொடர்களையும் உற்று கவனிக்க வேண்டும்.

(அன்னை மரியாள் கருவுற்றிருந்த போது) அவர்கள் (இறைவனிடம்) கூறினார்கள். மா .ஃபீ பத்னீ என்னுடைய வயிற்றில் எது இருந்தாலும் அதனை நான் உனக்கு அர்ப்பணம் செய்கின்றேன். அவர் தனக்கு ஒரு ஆண் பிள்ளை வேண்டும் என்று கேட்கவே இல்லை. ஆனால் அவர் கூறினார் முஹர்ரரன் - அர்ப்பணிப்பாக

இது என்ன கோட்பாட்டின் கீழ் வருகிறது என்றால், எவர் ஒருவர் இறைவனுக்காக அர்ப்பணம் செய்யப்படுகின்றாரோ அவர் உலக தொடர்புகளில் இருந்தும் பொறுப்புகளில் இருந்தும் விடுதலை ஆகி விடுகின்றார். எவராயினும் இறைவனுக்காக வழங்கப்பட்டு விட்டால் அவர் இறைவனுடையவராகி விடுகின்றார். அவர் மீது பெற்றோர்கள், மனைவிக்கான எந்தக் கடமையும் இருப்பதில்லை. இவ்வாறுதான் மிகச் சரியாக யூத மக்களும் யூத வணக்கஸ்தலங்களிலும் புரிந்து வைத்திருந்தார்கள்.



எவர் வணக்கஸ்தலத்திற்காக வழங்கப்பட்டு விட்டாரோ அவர் அந்தப் பள்ளிவாயிலை சேர்ந்தவர் ஆகி விடுகின்றார். உண்மையில் அவர் எடுத்துக் கொள்ளப்படுவார். அவர்களின் கீழே தான் அந்தப் பிள்ளை வளரும். அந்த பிள்ளை -களுக்கு உலக உறவுகளைப் பற்றி எந்தக் கவலையும் இருக்காது. இந்த முஹர்ரரன் என்றால் உலகப் பொறுப்புகளிலிருந்தும் விடுவிக்கப் -பட்டவர் என்பது பொருள்.

ஆனால் அன்னார் மனதில் ஒரு ஆண் குழந்தையை நினைத்து வைத்திருந்தார். அது அவர்கள் செய்த இந்தப் பிரார்த்தனையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனென்றால் யூத வழிமுறைகளின் படி அவர்கள் எந்தப் பெண்ணையும் யூத கோயில்களுக்கு அர்ப்பணம் செய்வதை ஏற்றுக்கொண்டதில்லை. அவர்கள் எப்பொழுதும் ஆண்களையும், ஆண் பிள்ளைகளையுமே அனுமதித்தார்கள்

இவ்வாறு தான் இருக்க வேண்டும் என்று இம்ரானின் குடும்பத்தைச் சேர்ந்த அந்த பெண்மணியும் புரிந்து வைத்திருந்தார்கள். ஆனால் அதனை அவர்கள் கேட்கவில்லை. இது இறைவனுடைய ஒரு விசேஷமான திட்டமாக இருந்தது. அதனாலேயே அவர்கள் ஒரு ஆண் குழந்தையைப் பற்றி கேட்பதை மறந்து விட்டார்கள்.

இறைவன் அந்தப் பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டான். சரி இது உங்களுக்கு வழங்கப்பட்டு விட்டது. நான் உனது வயிற்றில் எது இருந்தாலும் அதை ஏற்றுக் கொள்கின்றேன் உனது கருவறையில் எது இருந்தாலும் அதை ஏற்றுக் கொள்கின்றேன் என்றான். சரியா?

அந்தப் பெண்மணிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்த போது அவர்கள் ஆச்சரியம் அடைந்தார்கள். அதிர்ச்சியும் அடைந்தார்கள்.

அல்லாஹ்வே நான் உன்னிடம் ஒரு ஆண்குழந்தையை கேட்டேன் ஆனால் இப்போது பார்! ஒரு பெண் குழந்தை பிறந்திருக்கிறது!

அதற்கு பதிலாக இறைவன் கூறியது மிகவும் முக்கியமான -தாகும். இதனை மிகவும் கவனமாக கேட்டுப் புரிந்து கொள்ள வேண்டும்.

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

فَلَمَّا وَضَعَتْهَا قَالَتْ رَبِّ إِنِّي وَضَعْتُهَآ أُنْثَىٰ ؕ وَاللّٰهُ أَعْلَمُ بِمَا وَضَعَتْ ؕ
وَلَيْسَ الذَّكَرُ كَالْأُنْثَىٰ ۚ

பின்னர் அவள் அதைப் பெற்றெடுத்தபோது, அவள் பெற்றெடுத்ததை இறைவன் நன்கு அறிந்தவனாயிருந்தும் என் இறைவா! நான் ஒரு பெண்ணைப் பெற்றுள்ளேன் என்றாள். மேலும் (அவள் எண்ணியிருந்த) ஆண் (இந்தப்) பெண்ணுக்கு ஈடாகாது (என்பதையும் இறைவன் அறிவான்.) (3:37)

முதல் ஆச்சரியமான விஷயத்தை இறைவனுடைய இந்த பதிலில் நாம் பார்க்கின்றோம்.

அவர் பெற்றெடுத்தது பற்றி அல்லாஹ் மிகவும் அறிந்தவன் ஆக இருக்கிறான். இறைவன் இந்தக் கேள்வியை ஏன் எழுப்ப வேண்டும்?

அது பெண் குழந்தையாக இருந்தால் இறைவன் ஆமாம் எனக்கு தெரியும் அது பெண் குழந்தைதான் என்று கூறியிருக்க வேண்டும். ஆனால் இறைவன் அது பெண் குழந்தை என்று கூறவில்லை. அவன் கூறினான் இந்தக்

குழந்தையின் இயற்கையான பண்பு என்ன என்பதை இறைவன் அதிகம் அறிந்தவன். அது என்னவாக இருந்தாலும் சரி.

என் வயிற்றில் என்ன இருக்கிறதோ என்று அந்தப் பெண்மணி துஆ கேட்டதும் அவள் எதனை பெற்றெடுத்தாளோ என்று இறைவன் கூறியதும் ஒன்றாக பொருந்தி செல்கின்றது.

எனவே அல்லாஹ் கூறுகின்றான்: அது என்ன என்று எனக்கே அதிகம் தெரியும்.

அதற்குப் பிறகு இந்த ஆச்சரியத்திற்குரிய வாக்கியம் வருகின்றது.

ஸகர் அதாவது ஆண், ஒருபோதும் உன்ஸா அதாவது பெண்ணைப் போன்றது கிடையாது.

அவை இரண்டும் வெவ்வேறு விஷயங்கள் ஆகும். எனவே இந்தக் குழந்தை ஆணும் அல்ல பெண்ணும் அல்ல. ஒருவகையில் பேசும்பொழுது இது ஒரு வித்தியாசமான வகையைச் சேர்ந்த குழந்தையாக இருக்கிறது.

அவள் யார் என்று அல்லாஹ் மிகவும் அறிந்தவன். இதன் பொருள் அல்லாஹ் மிகவும் அற்புதமான முறையில் அந்தக் குழந்தைக்கு மக்களால் புரிந்து கொள்ள முடியாத முறையில் இரண்டு பண்புகளையும் கொடுத்திருக்கிறான்.

ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுப்பதால் எந்த நோக்கம் நிறைவேறுமோ அது இந்த பெண் குழந்தையின் மூலம் நிறைவேறும். இதன் பொருள் இயேசு கிறிஸ்து, அதாவது, ஹஸ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் குறித்த முன்னறிவிப்பும் இந்த இம்ரானின் குடும்பத்தைச் சேர்ந்த பெண்மணிக்கு வழங்கப்பட்டுவிட்டது.

அந்தப் பெண்மணி புரிந்து வைத்துள்ளதற்கு ஏற்ப இந்த குழந்தை ஒரு பெண் என்பதை இறைவன் ஏற்க மறுத்துவிட்டான். அவளுடைய புரிதலின்படி பெண் எப்படிப்பட்டவள் என்றால் அந்தப் பெண்ணால் ஒரு ஆணின் துணையின்றி ஒரு குழந்தையைப் பெற முடியாது.

ஆனால் இங்கு வேறு ஒரு விஷயம் இருக்கிறது. இந்தப் பெண் குழந்தை யார் என்றால் இவரால் சுயமே ஒரு குழந்தையை ஈன்றெடுக்க முடியும்.

அப்படி பெறப்படக்கூடிய அந்தக் குழந்தை அதாவது, ஈஸா அலைஹிஸ்ஸலாம் இன்னமும் தம்முடைய பாட்டியுடன் தொடர்புடையதாகவே இருப்பார். ஏனென்றால் வேறொரு நபர் அதாவது ஆண் இந்த ஈஸா என்னும் குழந்தையுடன் சம்பந்தப்படவில்லை.

ஹஸ்ரத் மர்யம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய குழந்தை என்ன ரத்தத்தைக் கொண்டிருக்குமோ என்ன மரபணுக்களைக் கொண்டிருக்குமோ அவை அனைத்தும் அவளுடைய தாயாராகிய அந்த இம்ரானின் குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணிடம் இருந்தே பெறப்படுகின்றது.

எனவே இது தான் இந்தப் புதிருக்கு விடையாக இருக்கின்றது.

இறைவன் அந்த இம்ரானின் குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணிடம் கூறினான்: நீ என்ன கூறுகிறாய் என்று எனக்குப் புரிகிறது. நான் அதனை மறுக்கவில்லை. ஆனால் நீ இந்த இடைப்பட்ட விஷயத்தைப் புரிந்து கொள்ளவில்லை.




எந்தக் குழந்தையை எந்த வகையைச் சேர்ந்த குழந்தையை நீ விரும்பினாயோ அது மிகவும் மகத்தான ஒரு குழந்தையாகும். நான் அதனை உனக்கு வழங்குவேன் ஆனால் அதற்கான சரியான நேரத்தில்.

இப்பொழுது நீ பெற்றெடுத்து இருக்கின்ற இந்தப் பெண் குழந்தை உனக்கும் அந்த வாக்களிக்கப்பட்ட ஆண் குழந்தை, அதாவது, இயேசு கிறிஸ்துவுக்கும் இடையில் ஒரு இடைப்பட்ட நபராக இருக்கிறது.

இந்த இரண்டு பெண்களுமே அதாவது ஈஸா (அலை) அவர்களுடைய தாயாரும், பாட்டியும் இம்ரானின் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களாக இருக்கிறார்கள்.

ஆக அந்த ஆண் குழந்தை (அதாவது இயேசு கிறிஸ்து) இரண்டாவது கட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது. முதல் கட்டத்தில் வழங்கப்படவில்லை. ஆனால் முதல் கட்டத்தில் வழங்கப்பட்ட அந்த பெண் குழந்தை (அதாவது அன்னை மரியாளும்) கூட ஒரு சாதாரண பெண் குழந்தை மட்டுமே அல்ல. ஏனென்றால் ஒரு பெண்ணால் ஒரு குழந்தையைத் தானாகவே பெற்றெடுக்க முடியாது. புரிந்ததா?

(தமிழாக்கம்: மவ்லவி R. அப்துல்லாஹ்)

*(6 -ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

மற்றும் விதி) ஆகும் பெரும்பாலான மக்கள் ஏதோ ஒரு வகையில் ஷரீஅத்தின் கஷ்டங்களைத் தவிர்த்து விடுகின்றார்கள். அவற்றை முழுமையாக கடைபிடிப்பதில்லை. ஆனால் களா மற்றும் கத்ரை விட்டு எவரால் தப்பி ஓட முடியும்? அதில் மனிதனுக்கு எந்த ஆற்றலும் இல்லை.

நினைவில் கொள்ளுங்கள்! மனிதனுக்கு இது மட்டுமே உலகம் அல்ல. இதற்குப் பிறகு இன்னொரு உலகம் உள்ளது. இங்கு இது மிகக் குறுகிய வாழ்க்கை மட்டுமே ஆகும். சிலர் ஐம்பது அல்லது அறுபது வயதில் மரணித்தனர் என்றால் வேறு சிலர் இன்னும் பத்து அல்லது பன்னிரெண்டு வருடங்கள் அதிகமாக வாழ்ந்தார்கள். எப்படி இருப்பினும் இந்த வாழ்வின் கஷ்டங்கள் மரணத்துடன் முடிந்து விடுகின்றன. ஆனால் அந்த உலகிற்கு முடிவே இல்லை. நியாயத் தீர்ப்பு நாள் என்பது சரியானதும் நம்பிக்கையின் ஒரு பகுதியாகவும் இருக்கின்ற வேளையில் தற்காலிக வாழ்வின் கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்வதில் என்ன கடினம் உள்ளது? அந்த நிரந்தர உலகிற்காகப் பாடுபட வேண்டும். எந்த ஒரு துன்பத்தையும் சந்திக்காத மனிதனிடத்தில் மறு உலகிற்காக என்ன மூலதனம் இருக்க முடியும்?

---

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

கொள்ள முடியுமோ அவர்கள் தமது பணிகள் பலவற்றைத் துறந்து விட்டு வர நேர்ந்தாலும் ஜல்ஸா ஸலானாவுக்கு வரவேண்டும். அவர்களின் வருகை வர முடியாதவர்களுக்கு ஒருபரிகாரமாக இருக்கும். அதாவது அவர்கள் ஞானத்தின் முத்துக்களை கலந்து கொள்ள முடியாதவர்களிடம் எடுத்துச் சொல்ல முடியும்.

ஜமாஅத் முன்னேற்றம் பெற ஆரம்பிக்கும் போது சோம்பேறிகளாகி இப்போது ஜமாஅத்தின் உறுப்பினர்கள் போதுமான அளவில் இருக்கின்றார்கள் என்று நினைக்கும் பலர் உள்ளனர்.

ஜல்ஸா ஸாலானாவின்போது காதியான் வர முடிபவர்கள் இங்கு வருவதில் அலட்சியம் காட்டினால் அது அவர்களின் அண்டை வீட்டாருக்கும் குழந்தைகளுக்கும் தவிர்க்க முடியாத விளைவை ஏற்படுத்தும் என்பதை அத்தகையவர்களுக்கு நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். வருடத்திற்கு ஒருமுறை காதியானுக்குத் தமது குடும்பத்தினரை அழைத்து வரும் நண்பர்களின் சந்ததியிடத்தில் அஹ்மதிய்யத் நிலைத்து நிற்பதை நான் பார்த்திருக்கிறேன். மேலும் இந்தக் குழந்தைகளுக்கு அஹ்மதிய்யத்தின் போதனைகளில் எந்தப் பரிச்சயமும் இல்லையென்றாலும் அவர்கள் தமது பெற்றோரிடம் 'தயவு செய்து எங்களை ஜல்ஸாவிற்கு அழைத்துச் செல்லுங்கள்' என்று வற்புறுத்துவதை நான் கவனித்தேன். இவ்வாறு அஹ்மதிய்யத் அவர்களின் சிறு வயதிலேயே அவர்களின் இதயங்களில் வேரூன்றத் தொடங்குகிறது. மேலும் அவர்கள் வளரும்போது அஹ்மதிய்யத்தின் அற்புதமான உதாரணத்தை அவர்களால் முன்வைக்க முடிகிறது.



ஜல்ஸா ஸாலானா ஒரு குழந்தையின் மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ஒரு குழந்தை எப்போதும் வழக்கத்திற்கு மாறான விஷயங்கள் மற்றும் நபர்களால் பாதிக்கப்படுகிறது. எனவே குழந்தைகள் ஜல்ஸா ஸலானாவிற்கு வரும்போது அவர்கள் மார்க்க நிகழ்ச்சிகளைக் காண்பது மட்டுமல்லாமல் புதிய விஷயங்கள் மற்றும் சூழலுக்கான அவர்களின் ஆர்வமும் திருப்தியடைகிறது. இந்த ஜல்ஸா அவர்களுக்குப் புதிரான மற்றும் மறக்க முடியாத காட்சியாக மாறும்.

எனவே ஜல்ஸாவிற்கு வருகின்ற தந்தைமார்களும் தமது குழந்தை ஜல்ஸாவிற்கு வருவதற்குத் தூண்டுதலாக இருக்கின்றனர். மறுபுறம் குழந்தைகளும் தம்மை ஜல்ஸாவிற்கு அழைத்துச் செல்ல தந்தையரை வற்புறுத்துகின்றனர். இதனால் நான் ஏற்கனவே கூறியபடி அஹ்மதிய்யத் அவர்களின் உள்ளங்களில் வேரூன்றி விடுகின்றது.

எனவே, தவிர்க்கப்படக்கூடிய காரணங்கள் இருந்தும் ஜல்ஸாவிற்கு வருவதை விட்டும் ஒருவர் தவிர்ந்து கொள்வது கட்டளைக்குக் கீழ்ப்படியாமை மட்டும் அல்ல, அது அவரது குழந்தைகள் மீது இழைக்கப்படும் கொடுமையும் ஆகும்.

எனவே நம்முடைய ஜமாஅத் இந்தக் குறிக்கோளைக் கருத்தில் கொள்ள வேண்டும். அவர்கள் தாம் மட்டும் ஜல்ஸாவில் கலந்து கொள்ளாமல், தமது அண்டை அயலாரையும் தம் அன்பிற்குரிய -வர்களையும் அழைத்து வர வேண்டும்.

அதே நேரத்தில் இந்நாட்களில் கவனமற்றிருப்பது உள்ளத்தை மேலும் கடினமாக்கி விடுகின்றது என்பதை அவர்கள் உணர வேண்டும். அல்லாஹ் தன்னுடைய புனித இடங்கள் கண்ணியப்படுத்தப்பட வேண்டும் என்று விரும்புகின்றான். எனவே எவர் அவற்றை மதிக்கத் தவறுவாரோ அவர் கண்டிக்கப்படதக்கவர் ஆவார்.

எனவே ஜமாஅத்தின் அன்பர்கள் ஜல்ஸாவிற்கு வருவதற்கு முன்னர் இவ்வாறு உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும். 'நாம் ஜல்ஸாவிற்கு ஒரு சம்பிரதாயத்தை நிறைவேற்றுவதற்காகச் செல்லவில்லை. நாம் இறைவனை நினைவு கூர்வதற்காக அங்கு செல்கின்றோம் நாம் ஜல்ஸா அரங்கில் இருக்கும் போதும் இறைவனை நினைவு கூர்வோம். அங்கிருந்து பிரிந்து சென்ற பின்பும் அவனை நினைவு கூர்வோம்.'

(அல்ஹகம் 06.08.2021)

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M. Muhammad Sultan Muhiyudeen | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam